Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலைரூபா 6:00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 27 10 - 06 - 94 வெள்ளிக்கிழமை ஓசை 112

## பரவும் கண்நோய்க்கு தகுந்த சிகிச்சை பெறுக

யாழ். நகரில் தற்போது காணப்படும் கண்நோய்க்கு ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை எடுக்கப்படாவிட்டால் நோயின் தாக்கம் அதிகரித்து கண்களின் பார்வை பாதிப்படையலாம் என யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். மேற்படி கண்நோய் கடும் வெப்பத்தினாலும் இலையான், கொசு போன்றவற்றினாலும் பரவுகின்றது. இந்நோயின் தாக்கம் காண (11-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் இரு வேறு தாக்குதல்; 8 அரச தரப்புப் படையினர் பலி

## பலர் காயங்களுடன் ஓட்டம்

[யாழ்ப்பாணம்]

**கிழக்கு மாகாணத்தில் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு வெவ்வேறான தாக்குதல்களில் சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த நான்கு பேர், பொலிஸைச் சேர்ந்த நான்கு பேரென எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். பலர் காயங்களுடன் தப்பி ஓடினர். இத் தாக்குதல்களின்போது பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

இவ்விரு தாக்குதல்களில் ஒன்று, திருமலை மாவட்டம் சம்பூர் பகுதியில் இடம் பெற்றது. திருமலை மாவட்டத்தில் சம்பூரில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் கப்டன் வீரமணி வீரச்சாவடைந்து இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் இத்தாக்குதல் நடைபெற்றது.

சம்பூர் இராணுவ முகாமிற்குப் பாதுகாப்பாக முகாமில் இருந்து 400 யார்தொலைவில் நின்ற இராணுவத்தினர் மீதே இத்திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதல் அதிகாலை 5.50 மணியளவில் இடம் பெற்றது. புலிகள் தரப்பில் இழப்பேதுமின்றி நடத்தப்பட்ட இத்தாக்குதலின் போது ஏ கே.எல்.எம்.ஜி. உட்பட ஆயுதங்களும் இராணுவப் பொருள்களும் (12ஆம் பக்கம் பார்க்க)

### சம்பூரில் புலிகளால் கைப்பற்றப்பட்டவை

திருமலை மாவட்டம் சம்பூரில் நேற்று சிறிலங்கா இராணுவத்தின் முகாமிற்கு முன் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம்ஜி - 01
- ★ ரம் மகசின் - 05
- ★ லிங் -525
- ★ ரி-56 -2 ரக துப்பாக்கி - 02
- ★ ரி-81 ரக துப்பாக்கி - 01
- ★ ஏ. கே. கோல்சர் - 03
- ★ ஏ. கே. எல். எம். ஜி. கிளீனிங் றொட் - 01
- ★ ரி-56 ரவைக்கூடு - 08
- ★ ரி-81 ரவைக்கூடு - 04
- ★ நடுத்தர ரவைகள் -875
- ★ ரி-56 கிளீனிங்றொட் - 01
- ★ தண்ணீர்க்கான் - 03
- ★ மழைக் கவசம் - 04
- ★ தொப்பி - 01
- ★ மிலிற்றி பெல்ட் - 01
- ★ ஒயில் கான் - 01
- ★ கிற்பாக் - 02

### வெளிக்கந்தவில் கைப்பற்றிய ஆயுதங்கள்

மட்டக்களப்பு வெலிக்கந்தவில் ரோந்துவந்த பொலிசார் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ★ ரி-56 ரக துப்பாக்கி -03
- ★ ரி-56 ரவைக் கூடுகள் -09
- ★ நடுத்தர ரவைகள் -315
- ★ ஏ.கே. கோல்சர் -03
- ★ கெல்மெட் -02
- ★ சப்பாத்து (சோடி) -01

### வீரச்சாவு



கப்டன் வீரமணி

(திருகோணமலை)

திருமலை மாவட்டம் பாட்டாளிபுரத்தில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில்போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் வீரமணி (சுப்பிரமணியம் ஈஸ்வரன் மூதூர்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## முகாமைச் சுற்றிவளைத்த இராணுவத்துடன் மோதல்

ஒரு போராளி வீரச்சாவு

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி காட்டுப் பகுதிக்கு நேற்று முன்தினம் ஊடுருவ முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

பகல் 12 மணியளவில் இடம் பெற்ற முதலாவது மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

பின்னர் மாலை 4.00 மணியளவில் விடுதலைப் புலிகளின் முகாமொன்றை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 15 நிமிட நேரம் கடும் மோதல் இடம்பெற்றது. இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

இம்மோதல்களில் வீரச்சாவடைந்த வீரவேங்கை இளந்திருமாறன் (செல்வராஜா ஜெகதீசன், திருகோணமலை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கை இளந்திருமாறன்

## வட - கிழக்கு பிரச்சினைக்கு ராணுவ தீர்வு வெற்றிதராது

பதவி விலகும் எம். பி. கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பினால் அது அரசியல் தீர்வாக மட்டுமே இருக்க வேண்டும் இராணுவ தீர்வுக்கு முயற்சி மேற்கொண்டால் அது முழுமையாக வெற்றியளிக்கப் போவதில்லை என தேசியப் பட்டியல் உறுப்பினர் அலெக் ரொபட்சன் தெரிவித்துள்ளார்.

தான் பாராளுமன்ற உறுப்பினராக முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் நியமனம் செய்யப்பட்டதாகவும் ஆனால் இன்று கட்சிக்கு எனது பதவி விலகல் அவசியமானதைத் தொடர்ந்து தான் இராஜினாமா செய்வ (12ஆம் பக்கம் பார்க்க)

## வெடி விபத்தில் வீரச்சாவு



வீரவேங்கை தியாகநந்தன்

நேற்று முன்தினம் இடம் பெற்ற எதிர்பாராத வெடி விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## றொனி டிமெல் பதவி ஏற்பு

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் றொனி டிமெல் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக நேற்று பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

தேசியப் பட்டியல் உறுப்பினர் இருவர் பதவி விலகியதை தொடர்ந்து இவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1977ஆம் ஆண்டு ஐ. தே. க ஆட்சியில் புளத் (12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எதிர்காலதிட்டம் இரு மாதங்களில்

சந்திரிகா குமாரணதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாடு எதிர் நோக்குகின்ற வடக்கு - கிழக்கு யுத்தம், வேலையின்மை, வறுமை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் அடங்கிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எதிர்காலத்திட்டங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் பொதுமக்கள் முன் சமர்பிக்கப்படும் என்று மேல்மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க ஆட்சி பல கூட்டுத் தாபனங்களை தனியார் மயப்படுத்தி அறப விலைக்கு விற்று வருகிறது தனியார் மயத்துக்கு நாம் எதிரிகள் அல்ல ஆனால் அதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

தனியார் மயப்படுத்தல் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும் அதனை விடுத்து தொழிலாளர்களை (12ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

பாசையூர் அந்தோனியார் கோவிலுக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று 5-6-94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(8512)

## புலமைப் பரிசில்பயிற்சி

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி வெளிவந்துவிட்டது புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளை முழுமையாகத் தழுவியது. 10 மாதிரிப் பயிற்சிகளையும் (விடைகளுடன்) 20 நவீனகட்டுரைகளையும் உடையது. புதியகல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (8510)

## றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து உடன் கண்ணாடி வழங்கப்படும். இல 288 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(8513)

## கீரைவகைகள்

கோடைகாலத்தில் உண்ண வேண்டிய மணத்தக்காளி கீரை, பசளிக்கீரை, கரிசலாங்கண்ணிக் கீரை, புதினாக் கீரை, பொன்னாவரசு, அகத்திக் கீரை என்பன வகைக்கு கன்று ஒன்று ரூ. 10/- வீதம் எம்மிடம்விற்பனைக்குள்ளன ''மில்க்வைற்'' (சி-9629)

## துளிர்

ஏப்ரல், மார்ச் இதழ்கள் விற்பனையாகிறது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
(8473)

## சமூக மாற்றத்திற்கான அரங்கு

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்கவியல் ஆய்வு- ஆசிரியர் க சிதம்பரநாதன். (8470)

## உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள 15KW மின் பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது தொடர்பு கொள்ளவும்,- சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச்சந்தி, தாவடி, தமிழீழம்.
(சி-9526)

## சலனம்

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

## துளிர்

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. (8474)

## புலமைப் பரிசில் வகுப்பு

ஆண்டு 5 புலமைப் பரிசில் சனி, ஞாயிறு துரித மீட்டல் வகுப்புகள் 11.06.94 சனி மு. ப. 9.00, பி. ப. 2. 00 மணி ஆரம்பமாகும், மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (8509)

---

# இணைப்பாளர்கள் தேவை

தென்மராட்சி கோட்டத்திற்கு தனியார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு இணைப்பாளர்கள் தேவை. க.பொ.த. சாதாரணதர, உயர்தரம் படித்தவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை தனியார் கல்வி நிர்வாகப்பிரிவு, இல. 19, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 20-06-94இற்கு முன்பு அனுப்புதல் வேண்டும். 24-06-94 வெள்ளிக்கிழமை நேர்முகப் பரீட்சைக்கு சகல ஆவணங்களுடன் சமூகம் தரவும்.

மா:வட்ட நிர்வாக இணைப்பாளர்

(சி-9632)

---

# சாரதா

கலை இலக்கிய சஞ்சிகை

அடுத்த இதழ் இலங்கைச் சிறப்பிதழ்

கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன்

வசந்தம், தமிழ்த்தாய், பூபாலசிங்கம்

புத்தககடைகளில் விற்பனையாகிறது

(8456)

---

# DIPLOMA IN NURSING

## தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

புதிய நெறி ஆரம்பமாகி விட்டது

- ★ இலகு பயிற்சி நெறி
- ★ சிறந்த விரிவுரையாளர் குழு
- ★ விசேட செய்முறை வகுப்புக்கள்
- ★ இலவச ஆங்கில, பாமஸி வகுப்புக்கள்

விபரங்களுக்கு:-

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**


*14, ST. PETER'S LANE*

*JAFFNA*

(சி-9630)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



செலவன்

## சி. சுஜீந்திரன் (முகுந்தன்)

[G.C.E (A/L) மாணவன் 1990]

திதி: 21-5-1994

அன்னைமடியில் 03-03-1971

ஆண்டவன் அடியில் 10 06-1992

உங்கள் பிரிவால் துயருறும்

பப்பா, மம்மி, தம்பிமார், நந்தன், நிறஞ்சன், மேனன், கஸ்தூரி, கரன், அம்மம்மா, அன்ரிமார், மாமாமார், சித்தப்பாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

'திருமகள் வாசா'
அல்வாய் கிழக்கு
அல்வாய்.

- குடும்பத்தினர்

(8511)

---

# COMPUTER கல்வி

**Diploma in Computer Programming**

**Basic Language**

(4 months)

திங்கள், புதன் 8-30 - 10-30

ஆரம்பம்: 15-06-94

FEES மாதம் 400/-

**Lotus 1-2-3**

(with macro)

2 MONTHS

சனி, ஞாயிறு 2-30 -- 4-00

ஆரம்பம்: 18-06-94

FEES மாதம் 1000/-

- ★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ★ தமிழிலும் விளக்கங்கள்
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி
- ★ பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

உறுதியான கல்வியைப் பெற

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3RD CROSS STREET,
JAFFNA.

(சி-9631)

---

# நினைவு கூருகின்றோம்... 10 06 1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சியில் சுட்டுக்கொல்லப்பட்ட வைத்தியகலாநிதி.

1986ஆம் ஆண்டு யாழ் - குருநகரிலிருந்து தூய ஒளி படகில் தொழிலுக்குச் சென்றபோது சிறிலங்கா கறுப்புச்சட்டை இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 34 கடற்றொழிலாளர்கள்-

தமிழீழக்கடற்பரப்பிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைப்பாறிய பாடசாலை அதிபர்.

1987ஆம் ஆண்டு மயிலெவவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ரமேஸ்** (கனகசபை செல்வரத்தினம்- திரியாய் - திருமலை)

1989ஆம் ஆண்டு மந்திகை, முகமாலைப் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மட்டுநகர் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட மாவடிவேம்பைச் சேர்ந்த பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு- கரவெட்டிதில்லன் தோட்டம் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். தமிழீழன்-பயஸ்** (சிவசம்பு பிரான்சிஸ் - வீச்சுக்கல்முனை - மட்டு)

வலிகாமம் பகுதியில் பல பாகங்களிலும் குடியிருப்பு மீது அகோர விமானக்குண்டு வீச்சில் துர்க்கையம்மன் ஆலயத்தின் தென்புறத்தே உள்ள தமது வீட்டில் பலியான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளம்பெண், தாய், தந்தை, மருமகன் ஆகிய 04 பேர், சண்டிலிப்பாயில் தனது வீட்டில் பலியான ஒருபெண், மாசியப்பிட்டியில் தத்தமது வீடுகளில் பலியான சிறுவன், இளம்பெண் 2 பேர் உட்பட கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

1993ஆம்ஆண்டு கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். ஜெபகன்** (இராசரத்தினம் தேவராஜ்-மகிளூர் மட்டு)

**லெப். சுதர்மன்** (முத்துலிங்கம் செல்வராஜ்- குருமண்வெளி -மட்டு)

**லெப். ஆஞ்சனேயன்-சந்துரு** (ஜோன் தேவசகாயம் - களுவங்கேணி -மட்டு)

**2-ம் லெப். இளமாறன்- ரமணி** (மார்க்கண்டு குணசீலன் - 3-ம் வட்டாரம், கட்டைபறிச்சான் - திருமலை)

**2-ம் லெப். முத்தையன்- கமல்** (காசிப்பிள்ளை சுந்தரலிங்கம் - மூதூர் - திருமலை)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய எமது ஆதரவாளரான

**ஜீவன்** (6-ம் கட்டை, திருமலை)

மட்டு - நாவற்குடாப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். அற்புதநாதன்-அற்புதன்** (கணேசமூர்த்தி கமலகாந்தன் 2ம் குறுக்குத்தெரு - மட்டு)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9626)

# ஐரோப்பாவின் தலைவிதியை நிர்ணயித்த இராணுவ நடவடிக்கை 'டி - டே'

கடந்த ஆறாம் திகதி திங்கட் கிழமை பிரான்சின் கடற்கரை பகுதியான நோர்மண்டியில் பெரும் படையெடுப்பு ஒன்று நடைபெற்றது. அமெரிக்க பிரிட்டிஷ் விமானப்படைகளின் முன்னைய டக்ளஸ்ரக குண்டுவீச்சு விமானங்களும் போர் விமானங்களும் தாக்குதல் நடத்தின. நோர்மண்டி கடலில் பல போர்க் கப்பல்களின் பீரங்கிகளின் முழக்கம். படைவீரர்களின் அணிவகுப்புகள். ஆனால் இத்தனைக்கும் மத்தியில் இப்படையெடுப்பைக்காண அந்த கடற்கரையில் லட்சக்கணக்கான மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. பெரும் படையெடுபபு ஒன்றை பார்வையிட மக்கள் கூட்டம் திரண்டதா என ஆச்சரியம் எழலாம் ஆனால்அங்குநடந்ததுபெரும் படையெடுப்போ போரோ அல்ல.

50ஆண்டுகளுக்கு முன்இந்த பிரெஞ் கடற்கரையில் நடந்த ஒரு மாபெரும் படையெடுப்பின் - உலகின் மிகப்பெரும் கடல்மூலமான இராணுவத் தரையிறக்கு நடவடிக்கையை நினைவுகூரும் பொன்விழாக் கொண்டாட்டங்களே. கடந்த 6ஆம் திகதி பிரெஞ் கடற்கரையோரத்தில் நடந்தேறின இதற்கென 50ஆண்டுகளுக்கு முன் நடைபெறற படையெடுப்பு போன்று அதே மாதிரியிலான ஒரு படையெடுப்பு கண்காட்சி நடத்திக் காண்பிக்கப்பட்டது.

இதை அங்கு திரண்டிருந்து பார்த்தவர்களில் 50 ஆண்டுகளுக்கு முன்'டி-டே' '(D-Day) என்ற அந்த பாரிய படையெடுப்பில் பங்குபற்றிய முன்னாள் படைவீரர்களும் அடங்கியிருந்தனர். இவர்களில் அநேகர் 80 வயதைத் தாண்டிய வயோதிபர்கள். இந்த படையெடுப்பு கண்காட்சியை தமது கண்களில் நீர் சொரிய பார்த்துக் கொண்டிருந்த இந்த வயோதிப முன்னாள் படைவீரர்கள் தமது பழைய போர் நினைவுகளை தமது மனக்கண்முன்கொண்டுவந்து நினைவு கூர்ந்தனர்.

★ ★ ★

இரண்டாம் உலகப்போரின் 1944ஆம் ஆண்டின் முற்பகுதி.... இங்கிலாந்தில் பொது நலவாய நாடுகளின் துருப்புகளும், அமெரிக்கா, பிரான்ஸ்,போலந்து போன்ற பல்வேறு நாடுகளின் துருப்புகள் வந்து குவிந்துகொண்டிருந்தன. திடீரென இவ்வாறு தமது நாட்டில் பல்நாட்டுப் படைகள் வந்து குவிவதை இங்கிலாந்து மக்கள் ஆச்சரியத்துடன் நோக்கினர். துருப்புகள் அணிவகுத்துவீதி வழியே செல்வதை சிறுவர்முதல் முதியோர்வரை வியப்புடன் பார்த்து நின்றனர். இங்கிலாந்தின் தென்பகுதி கடற்கரை நெடுகிலும் நேசநாட்டுப் படைகளின் போர்க்கப்பல்கள் தரித்து நின்றன. பாரிய படைதரையிறக்கும்கப்பல்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன.

அங்கு குவிக்கப்பட்டிருந்த பலநாட்டுத் துருப்பினரைப் போன்றே மக்களுக்கும் இதுவெல்லாம் எதற்காக என்று புரியவில்லை. ஆனால் அமெரிக்காவின் இராணுவ ஜெனரல் ஐசனோவரின் தலைமையகத்தில் மட்டும் உலகில் மாபெரும் கடல்வழி மூலமான படைத்தரையிறக்கமாக அமையவுள்ள இராணுவத் திட்டம் உருவாக்கப்பட்டு அது ஆராயப்பட்டுக் கொண்டிருந்தது.

ஜேர்மனிய சர்வதிகாரி ஹிட்லரின் பிடியிலிருந்த மேற்கு ஐரோப்பாவை மீட்பதற்காக ஐரோப்பா மீது - ஜேர்மனிய நாஸி இராணுவத்திற்குஎதிராக- இந்த கடல் மூலமான இராணுவ நடவடிக்கைக்கு ஒபரேஷன் 'ஓவர்லோட்'என்றகுறியீட் டுபெயர் இடப்பட்டது. படையெடுப்பை மேற்கொள்ள வேண்டிய திகதிக்கு 'டி - டே'(D-Day) என்ற குறியீட்டு பெயர் கொடுக்கப்பட்டது.

## நோர்மண்டி கடற்கரை

ஐரோப்பா மீது ஹிட்லருக்கு எதிராக மேற்குப் புறமாக படைகளை தரையிறக்குவதற்காக சாதகமான தரை அமைப்பை ஆராய்வதற்கென டென்மார்க் முதல் பிரான்ஸ் வரையிலான கடற்கரையோரப்பகுதி நேசநாட்டுப்படைகளின் உயர் அதிகாரிகளினால் ஆய்வுக்குட்பட்டது. இதன் மூலம் 50 மைல் நீளமுடைய பிரான்சின் நோர்மண்டி கடற்கரை தரையிறங்குவதற்கு சாதகமான இடம் எனத் தெரிவு செய்யப்பட்டது, இவ்விடம் தெரிவு செய்யப்பட்டமைக்கு படையெடுப்பு ஆரம்பிக்கப்படும் இங்கிலாந்தின் கரையிலிருந்து இது கிட்டிய தூரத்தில் இருந்ததும் இதனால் போர் விமானங்கள் விரைந்து வந்துசேர்வதற்குவசதியாகவும்இருக்கும்எனகணிப்பிடப்பட்டதுமே காரணம்எனக் கூறப்படுகிறது.

நோர்மண்டி கடற்கரையில் நேசநாட்டுப் படைகள் தரையிறங்க வேண்டிய ஐந்து இடங்கள் தெரிவானது இந்த ஒவ்வொரு இடங்களுக்கும் ஸ்வோர்ட், ஜூனோ, கோல்ட் ஒமாகா, உட்டா என்ற குறியீடுப் பெயர்களும் இடப்பட்டது.

படையெடுப்பை ஆரம்பிக்க வேண்டிய திகதியான டி - டேயை மூன்று முக்கிய காரணிகள் தீர்மானித்தன. ஒன்று கடலின் வற்றுப்பெருக்கு கடல்மட்டம் குறைவடையும் நாளிலேயே படை இறக்கலை சுலபமாக மேற்கொள்ள முடியும். கடற்கரையில் ஜேர்மனிய படையினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை கண்டறிந்து அழிக்கமுடியும். இரண்டாவது தெளிவான வானம் அன்றைய தினம் இருக்கவேண்டும். இப்படியான காலநிலை இருந்தாலே விமானப்படையும், கடற்படையும் தமது இலக்குகளை தெளிவாக தாக்க முடியும். மூன்றாவது தெளிவான நிலவு வெளிச்சம் கடல்மூலம் படையிறக்கம் மேற்கொள்வதற்கு முன்பாக இரவில் எதிரி நிலைகளுக்கு பின்பாக எதிரியின் முதுகுப்புறமாக - பரசூட் மூலம் படைகளை இறக்கி எதிரியை குழப்பியடிக்க வேண்டிய தேவை இருந்தது.

முன்னதாக 1944 மே மாதத்தில் படையெடுப்பை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தரையிறக்கும் கப்பல்களின் பற்றாக்குறையினால் அத்திகதி கைவிடப்பட்டது. பின்னர் ஜூன் மாதத்தின் 5ஆம், 6ஆ , 7ஆம் திகதிகள் ஆலோசிக்கப்பட்டு இறுதியில் 6ஆம் திகதி படையெடுப்பு - டி - டே - திகதியாக தெரிவு செய்யப்பட்டது.

பிரிட்டனின் 17 படைப்பிரிவுகள், அமெரிக்காவின் 20 படைப்பிரிவுகள், பிரான்ஸ், போலந்து நாடுகளின் தலா ஒரு படைப்பிரிவுகள், 5,407 போர்விமானங்கள், 3, 467 குண்டு வீச்சுவிமானங்கள், சத்தமின்றி காற்றில் சறுக்கிச் செல்லும் 2, 591 மரத்திலான கிளைடர்விமானங்கள், 754 போர்க்கப்பல்கள் 4066 தரையிறக்கும் கப்பல்கள், 20,000 இராணுவ வாகனங்கள், 347 கண்ணிவெடி அகற்றிகள் 2, 876, 439 நேசநாட்டுத்துருப்பினர், 18, 000 பரசூட் படையினர் இவ்வாறாக 42 தரைப்படைப் பிரிவுகள் படையெடுப்பிற்கான உத்தரவுக்காக காத்து நின்றன. (உலகின் மாபெரும் கடல்வழி மூலமான படையெடுப்பு என உலக சாதனைகளை பதிவு செய்யும் கின்னஸ் நிறுவனம் இப்படையெடுப்பை பதிவு செய்துள்ளது) தரைப்படைகளுக்கு பொறுப்பாக பிரிட்டிஷ்இராணுவ ஜெனரல் மொன்ட் கோமரி நியமிக்கப்பட்டிருந்தார். கூட்டுப்படைகளுக்கு அமெரிக்க ஜெனரல் ஐசனோவர் பொறுப்பாக இருந்தார்.

இதனிடையே தமது படையெடுப்புக் குறித்து ஜேர்மனியப் படைகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக சில போலிப்படை நகர்வுநடவடிக்கைகள் நேசநாட்டுப் படைகள் மேற்கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் டோவர் துறைமுகத்தில் மாதிரி கப்பல்கள், விமானங்கள் அதிகளவில் குவிக்கப்பட்டன. போலி படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஜேர்மனியப்படையின் ஆயத்தம்

இங்கிலாந்தில் நேசநாட்டுப் படைகளின் குவிப்பு குறித்து ஜேர்மனிய புலனாய்வுப் பிரிவு எச்சரித்ததையடுத்து நோர்வே முதல் தென்ஐரோப்பா வரை கடற்கரை பகுதியில் நீண்ட சுவர்போல் படைகளை நிறுத்த ஹிட்லர் உத்தரவிட்டார். ஆனால் ஜேர்மனியரோ இத்தகையதோர் நேசநாட்டுப்படைகளின்கடல் வழிமூலமான தரையிறக்கம் சாத்தியமில்லை என அசட்டையாக இருந்தனர். இதனால் ஜேர்மனியின் கரையோரப்பாதுகாப்பில் சிலபல வீனங்கள் காணப்பட்டன. அதேசமயம் ஜேர்மனியின் மீது கிழக்கு முனையில் சோவியத்தின் செம்படையினர் முன்னேறி வந்தமையானது ஜேர்மனியின் பலத்தை வெகுவாக பாதித்து விட்டிருந்தது.

## ஜேர்மனிய அதிகாரிகள் முரண்

நேசநாட்டுப் படைகளின் படையெடுப்பைதடுக்கமேற்கு ஐரோப்பா பகுதிக்கு ஜேர்மனின் 60 படைப் பிரிவுகள் பீல்ட் மார்ஷல் வொன்ரன்டஸ்ரற் தலைமையில் அனுப்பப்பட்டது. ஜேர்மன் படையினர் நேசநாட்டுப் படைகள் வந்திறங்கக்கூடிய இடம் பாஸ்டிகலோஸ்பகுதியாகவே இருக்கும் என்ற தவறான கணிப்பில் தமது பலம்பொருந்திய 15ஆம்படைப்பிரிவை அங்கு நிறுத்திவைத்திருந்தனர். பீல்ட் மார்ஷல் ரோமல் தலைமையில் மற்றோர் படைப்பிரிவு நோர்மண்டியிலும் நிறுத்தப்பட்டிருந்தது: நேசநாட்டுப் படைகள் மீதான தாக்குதல் குறித்து ரோமலும் ரன்டஸ்ரற்றும் கருத்து வேறுபாடுகளை கொண்டிருந்தனர். சன்டஸ்ற் நேசநாட்டுப் படைகள் தரையிறங்கி உள்ளே வந்த பின் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்றார் ஆனால் ரோமல் கடற்கரையில் வைத்தே நேசப்படைகளை தாக்க வேண்டும் என்றார். இதனால் ஜேர்மனியப் படையின் எதிர்த்தாக்குதல் குறித்து அப்படையினர் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டது எனக் கூறமுடியும்.

## டி - டே (D - Day) ஆரம்பம்

நோர்மண்டியில் அமைந்திருந்த ஜேர்மனியின் 10 ரேடார் நிலைகள் நேசநாட்டு விமானங்களால் தாக்கி அழிக்கப்பட்ட மறுநாள் யூன் 6ஆம் திகதி அதிகாலை 1.30 மணி. பரசூட் படைகளை ஏற்றிச் சென்ற பிரிட்டனின் விமானங்களிலிருந்தும் அமெரிக்க விமானங்களிலிருந்தும் திட்டமிட்டபடி நோர்மண்டியின் ஐந்து வெவ்வேறு இடங்களில் பரசூட்படையினர் எதிரிகளின் நிலைகளுக்கு பின்பாக தரையிறங்கினர் இந்த சமயம் நேசநாடுகளின் விமானதாக்குதலும் ஆரம்பித்தது அன்று காலை 6.30 மணிக்கு நேசநாட்டுப் படைகள் கடற்படை பீரங்கிகளின் கடும் தாக்குதலின் உதவியுடன் நோர்மண்டி கரையில் தரையிறக்கும் கப்பல்களிலிருந்து. குதித்தனர். ஜேர்மனியப்படைகள் பதில் தாக்குதலை ஆரம்பித்தனர். கடும் போர் அங்கு வெடித்தது நேசநாட்டுப்படையினர் ஆயிரக்கணக்கில் தரையில் காலை ஊன்றுவதற்கு முன்பும் தமது துப்பாக்கிகளைக் கூட ஒரு தடவையேனும் இயக்குவதற்கு முன்பாகவும் குண்டடிபட்டு வீழ்ந்து இறந்தனர். இத்தகைய பெரியளவிலான இழப்பை நேசநாட்டுப் படையில் அங்கம் வகித்த அமெரிக்க துருப்புக்களே அதிகம் சந்திக்க நேர்ந்தது. மொத்தத்தில் 15 ஆயிரம் நேசநாட்டுப்படையினர் இதில் கொலலப்பட்டனர்.

எனினும் ஜேர்மனிய விமானப்படையின் பலத்தை நேசநாட்டுப் படைகளின் விமானப்படை தாக்கி அழித்து விட்டமையினால் நேசப்படைகளின் முன்னேற்றம் சுலபமாகியது. எனினும் ஒருவாரப் போரின் பின்பே நேசப்படைகளின் முன்னேற்றம் சுலபமானதாகியது எனக் கூறலாம்.

இரண்டாம் உலகப்போரில் வெற்றிமேல் வெற்றிகளை குவித்து வந்த ஜேர்மனி நேசநாட்டுப்படைகளின் இந்த ஒபரேஷன் ஓவர்லோட் என்ற பாரிய கடல்வழி இராணுவ நடவடிக்கையினால் தோல்வி எனும் பெருஞ்சுமையை சுமக்க நேரிட்டது. இதே சமயம் கிழக்கு முனையிலும் முன்னேறி வந்த சோவியத் படையினரதும் நகர்வும் இருமுனையில் நசுக்கப்பட்ட ஜேர்மனியை இறுதியில் சரணடையச் செய்ய வைத்ததுடன் இரண்டாம் உலகப்போருக்கும் முற்றுப்புள்ளி வைத்தது.

பெரும் சாம்ராஜ்யத்தை ஐரோப்பாவில் நிறுவியிருந்த ஜேர்மனியை முறியடித்த இந்த டி - டே நடவடிக்கை ஐரோப்பாவின் தலைவிதியை மாற்றியமைத்து விட்டதென லாம்.

துஷ்யந்தன்

## 200 பேரை பலி கொண்ட பொம்மை ஆலைத் தீ

கடந்த வருடத்தில் மிகவும் மோசமானதும் கோரத்தனமானதும் கொடுமையானதும் என வர்ணிக்கப்படும் தீவிபத்து சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பாங்கொக் நகரில் தொழிற்சாலையொன்றில் நடைபெற்றுள்ளது.

பாங்கொக் நகரில் பொம்மைத் தொழிற்சாலையில் வேலை செய்த இருநூறு இளம்பெண்கள் இவ்விபத்தில் தீயினால் கருகி மாண்டனர். சுமார் நாற்பது நிமிடங்கள் வரை ஏற்பட்ட இத்தீவிபத்திலேயே இவர்கள் அனைவரும் கருகி மாண்டுள்ளனர் ஒருவர் எரிவதை இன்னொருவர் பார்த்துக் கொண்டு தனது உயிருக்காக இவர்கள் போராடினார்கள்.

தீயை அணைப்பதற்கு உரிய நடவடிக்கை ஒன்றைக் கூட மேற்கொள்ள முடியாத அளவு தொழிலாளர் பதற்றம் அடைந்து விட்டனர். உடலில் தீபற்றி எரியும்போது அந்த அகோரத்தில் அவர்கள் அந்நிறுவனத்தின் உள்ளே ஒடியும் கீழே உருண்டும் இருந்தமையினாலே தீ அங்குள்ள பொருள்கள் மீது பற்றிக் கொண்டுள்ளது. தீயணைக்கும் படையினர் வந்து சேர்வதற்கு முன்னே யாவும் நடந்து முடிந்து விட்டது.

மேற்குலக நாடுகளுக்கு பஞ்சினால் அடைக்கப்பட்ட நத்தார் பாப்பா, யானை பொம்மைகள் மற்றும் மிருகங்கள், பறவைகள் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் இந்நிறுவனத்தில் பொருள்கள் நாளாந்தம் களவு போவதாகவும் இதனைத் தடுக்கும் நோக்குடன் மேற்படி ஊழியர்கள் யாவரும் வேலைக்கு வந்தவுடன் அதன் சகல வாசல்களும் மூடப்பட்டு திறப்பு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரிடம் ஒப்படைக்கப்படும். இது வழமையாக நடைபெற்று வரும் சம்பவமாகும்.

அன்றும் இவ்வாறு நடந்துள்ளது ஆனால் திறப்பை வைத்திருந்தவர் தீவிபத்து ஏற்பட்டவேளை அவ்விடத்தில் இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து அந்நிறுவனம் முழுவதும்தீ பற்றிஎரியத்தொடங்கியது.

ஒருவர் எரிந்து கருகுவதை மற்றவர் பார்த்து எனக்கும் இதே கதிதான் என நினைத்துக் கொண்டே தமது மரணத்தை அரவணைத்துக் கொண்டு இருந்திருக்கலாம். இறுதியில் பொலிசார் வந்து நிறுவனத்தின் பூட்டப்பட்ட வாசல்களை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று கருகிய நிலையில் இருந்த உடல்களை அப்புறப்படுத்தி வெள்ளைச் சீலையினால் கட்டி உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

- எம். என்

# பாதாள உலக கிரிமினல்களும் ஐ.தே.க. அரசியற் தலைவர்களும்

சிறிலங்காவின் அரசியல் வாதிகள் - குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், தத்தமக்கென தனித்தனியான பாதாளஉலக குழுக்களைக்கொண்டிருந்தனர் என்ற உண்மை இப்போது வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. கட்சியின் ஒவ்வொரு கிளைக் காரியாலயமும் கூட ஏதோவொரு பாதாள உலகக் கிரிமினல் கூட்டத்துடன் தொடர்பு கொண்டே செயற்பட்டு வந்துள்ளது. இதனால் தான் தேர்தல்காலங்களில் வன்முறைச் சம்பவங்கள் பரவலாகத் தலைவிரித்தாடக்கூடிய வாய்ப்பு இருந்தது. இதனைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் பொலிசாரே இருக்க முடியவில்லை. இதற்கு இப் பாதாள உலகக் கிரிமினல்களுக்கு இருந்த அரசியல் செல்வாக்கும், பாதாள உலகக் கிரிமினல்களின் மிரட்டல்களும் காரணமாகும். ஆக சுருக்கமாகக் கூறின் சிறிலங்காவின் அரசியல் நடவடிக்கைகளில் சரிபாதிக்கும் மேலானவை பாதாள உலக கிரிமினல்களுடன் தொடர்பு பட்டவையாகவே இருந்துள்ளன எனலாம்.

தேர்தல் காலங்களில் தொகுதி வரியாக பிரசார வேலைகள் என்ற போர்வையில் அமைச்சர்களின் பொறுப்பில் விடப்படுவது தெரிந்ததே. இது வெளிப்படையான அறிவிப்பின் பின்னணியில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குதொடர்புடைய பாதாள உலகின் பிரமுகர்கள சம்பந்தப்பட்ட தொகுதிக்கு படையெடுப்பு நடாத்துவதும், எதிர்க்கட்சி வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மிரட்டப்படுவதும், திட்டமிட்ட ரீதியில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவதும், தேர்தல் வேலைகள் என்ற போர்வையில் அநாகரீகமான சம்பவங்கள் நடைபெறுவதும் அம்பலத்தில் ஏறாத இரகசியங்களாகவே இதுவரை இருந்துள்ளன. பண்டைய காலங்களில் ஒவ்வொரு சேனாதிபதிகளுக்கும் ஒவ்வொரு படைப்பிரிவு இருந்ததைப் போன்று ஐ. தே. கவின் ஆட்சியில் ஒவ்வொரு அமைச்சருக்கும் அவர்களுக்கென தனித்தனி குழுக்கள் இருந்துள்ளன. இக் குழுக்களின் செயற்பாட்டிற்கு பொலிசார் தரப்பிலிருந்து குறுக்கீடுகள் எழாதவாறு பார்த்துக் கொள்வதே பெரும்பாலும் அமைசசர்களின் பணியாக இருந்துள்ளது எனலாம். இதையும் மீறி பொலிசாரின் பார்வை இக் கிரிமினல்கள் மீது படியுமாயின் சம்பந்தப்பட்ட பொலிசார் திடீர் இடமாற்றத்திற்கு அல்லது தற்காலிக பதவி நீக்கலுக்கு உள்ளாக்கப்படும் நிலை எழுதாத உடன்பாடாக இருந்துள்ளது. இதற்காக தொலைபேசி மிரட்டல் முதல் ஸ்தலத்திற்கு அமைச்சரின் நேரடி விஜயம் வரை இடம் பெற்றிருக்கக் கூடும்.

இத்தகைய திரைமறைவு சங்கதிகள் இன்று நேற்றுத்தான் ஆரம்பமானவை அல்ல. 1977-ம் ஆண்டு முதலே இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றுவந்துள்ளன. எனினும் கடந்த காலங்களில் ஆளும் கட்சி ஒரு பலமான நிலையில் இருந்து வந்துள்ளமையால் இத்தகைய சம்பவங்கள் பெரும்பாலும் வெளியே தெரிய வரவில்லை. ஆளும் கட்சிக்குள் இருக்கும் உட்பூசல்களும், கட்சி பலவீனமடைந்துள்ள நிலையும் திரைமறைவில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் அம்பலமாவதற்கு பிரதான காரணியாக உள்ளது எனலாம்.

## பாதாள உலகின் கட்டுப்பாட்டிற்குள்

மேலும் அரசியல் வாதிகளின் கண் அசைவுக்கு ஏற்ப பாதாள உலகக் கிரிமினல்கள் இதுவரை செயற்பட்டு வந்த நிலை இன்று மாறி பாதாள உலகக் கிரிமினல்களின் சுட்டுவிரல் அசைப்பிற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய நிலை அரசியல் வாதிகளுக்கு ஏற்பட்டிருப்பதும் மற்றுமொரு காரணமாகும் அதாவது எத்தகைய அரசியல் இக் கிரிமினல்களுக்கு புகலிடம் வழங்கியதோ அந்த அரசியல் நிலையை ஆட்டிப்படைக்கும் சக்தியை இச் சக்திகள் பெற்று விட்டன என்பதாகும்

ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவின் 'வேண்டுகோளுக்கு இணங்க தேசியப்பட்டியல் மூலம் நியமனம பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறக்க தயக்கம் காட்டிய போது இது வெட்ட வெளிச்சமாகியது. ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு ஏற்ப பதவி விலகினால் உயிர் துறக்க நேரும் என்ற பாதாள உலக கிரிமினல்களின் கொலை மிரட்டல் ஒருவகையில் ஐ. தே. கவின் தலைமைக்கு சவாலாக மாறியது எனலாம்,

## காமினியை விரும்பவில்லை

முன்னாள்அமைச்சர் காமினிதிசாநாயக்காவும் அவரது அணியினரும் ஐ.தே.கவிலிருந்து விலக்கப்பட்டபோது- அவர்கள் அரசாங்கத்திக்கு எதிராக செயற்பட்டபோது- அவர்களின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதில் நேரடியாக சம்பந்தப்படட 'பாதாள உலகம்' மீண்டும் காமினி முன்னணிக்கு வருவதை விரும்பவில்லை. இதற்கு தாம் பழிவாங்கப்படலாம் என்ற பீதியும் ஒரு வகையில் காரணமாக இருக்கலாம். இதனாலேயே காமினி திசாநாயக்காவும் அவரைப் போன்ற மற்றும் சிலரும் முன்னணிக்கு கொண்டுவரப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கையில் 'பாதாள உலகம்' தீவிரமாகியது; காமினிக்கு சார்பான பாதாள உலகினால் தமக்கு தொல்லைகள் நேரலாம் என்றும், தமது செல்வாக்கு மட்டுப்படுத்தப்படலாம் என்றும், பீதியுற்ற பாதாள உலகினர் தமது பாணியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது தான் பாதாள உலகின் சக்தி வெளிப்பட்டது எனக்கூறுவது மிகையாகாது. தேசியப் பட்டியல் மூலம் நியமனம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினரிடம் நேரில்சென்ற பாதாள உலகக் கிரிமினல் ஒருவர் தனது கைத்துப்பாக்கியை நீட்டி 'பதவி விலகினால் மரணம் நிச்சயம்' என்று எச்சரித்து விட்டுத் திரும்பினார். இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி துறப்பில் தாமதமேற்பட்டது பாதாள உலக கிரிமினல்களின் மீது பொலிசார் கரம் படிந்து அவர்கள் முடமாக்கப்பட்டதைத் தொடர்ந்தே தேசிய பட்டியல் உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராக பதவிகளைத் துறந்து வருகின்றனர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை நேரில் சந்தித்து தமது பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே உறுப்பினர்களின் பதவி விலகல்கள் பற்றிய அறிவிப்புகள் வெளியாகின.

இவ்வாறாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயமாக செயற்பட முடியாத அளவுக்கு பாதாள உலக கிரிமினல்கள் பலம் பெற்று இருந்தனர். இந் நிலையில், அரசாங்கம் கிரிமினல்கள் மீது நடவடிக்கையைத் தொடங்கியது.

> ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் பாதாள உலக கிரிமினல்கள் ஐ.தே.கவின் வளர்ப்புப் பிள்ளைகளாக மட்டுமேஇயங்கினார்கள்·பிரேமதாசா காலத்தில் ஐ.தே.கவின் சொந்தப் பிள்ளைகள் போலக் கருதப்பட்ட இவர்களுக்கு கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது உட்பட கட்சியில் முக்கிய இடம் பெற்றனர்.
> டி. பி. விஜேதுங்காவின் காலத்தில்....

பாதாள உலகைச் சேர்ந்த ஒரு சில குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படத் தொடங்கியதும் ஏனையவை மௌனமாக ஒதுங்கிக் கொண்டன. தமது செயற்பாட்டு இடத்தை மாற்றிக் கொண்டன.

## புதியவர் புகுத்தப்படுகின்றனர்

இந்த நிலையில் ஆளும் ஐ. தே. க. பாதாள உலக கிரிமினல்களில் பழையவர்களை ஒதுக்கி புதியவர்களை வரவேற்க தயாராகி இருப்பதாகத் தெரியவருகிறது. புதியவர்களின் கை தற்போது ஓரளவுக்கு ஓங்கி வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் தேர்தல்களின் போது பாரிய குழு மோதல்கள் இடம்பெறலாம் எனவும், சிறிலங்காவின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு எதிர்வரும் தேர்தல்களில் பெருமளவு கொலைகள் இடம்பெறலாம் எனவும் அரசியல் அவதானிகளால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. கொலைகளும், வன்முறைச் சம்பவங்களும் பெருகி நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்படும் சூழ்நிலை தோன்றினாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை எனவும் மேலும் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியிலேயே புதிய குழுக்களுக்கும், பழைய குழுக்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெறக் கூடும். இதுவரை நடைபெற்ற சம்பவங்களில் இழக்கப்பட்ட உயிர்களை விட இனி நடக்கவிருக்கும குழு மோதல்களில் அதிக உயிர்கள் இழக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மோதல்கள் கூட எதிர்க்கட்சிகளின் வெற்றி வாய்ப்பை இலகுபடுத்திவிடக் கூடும் என்பதும் எதிர்பார்க்கப்படக்கூடியதே.

தென் மாகாண சபைத் தேர்தலின் போது இத்தகைய சில காட்சிகள் அரங்கேறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பாதாள உலகக் கிரிமினல்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இடங்கள் பற்றி மக்கள் எதிர்க்கட்சித் தலைமைக்கு தகவல் வழங்கியதும், இவர்கள் தங்கியிருந்த இடங்கள் மக்களால் முற்றுகையிடப்பட்டு வெளியேற்றப்பட்டதும் இதற்கிடையில் மறக்கப்பட்டிருக்கக் கூடியதல்ல. பாதாள உலகின் வெவ்வேறு குழுக்களுக்கிடையே நிலவிய பதவி நிலைப் போட்டிக்கு தென் மாகாண சபை தேர்தல் ஒரு தளமாகியிருந்ததும் இங்கு அவதானிக்கத்தக்கதே.

## வெலிக்கடை சிறை தங்குமிடம்

மேலும் பாதாள உலக தலைவர்களின் இருப்பிடங்கள் மிகவும் மர்மமானது.வெலிக் கடைசிறைச்சாலை இவர்களின்முக்கியஇருப்பிடங்களில்ஒன்று. பகல் வேளையில் சிறைச்சாலைக் கூண்டுகளில் 'சியஸ்டா' ரக மெத்தையில் தூங்கும் இவர்கள் இரவுநேரங்களில் மிகவும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர். இதனால் தற்செயலாகத் தானும் பொலிசாரோ பொதுமக்களோ இவர்களை அடையாளம் காணும் வாய்ப்பு இல்லாது போகின்றது. அத்துடன் தொலைபேசி அழைப்புக்கள் கூட இவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. இன்றும் வாகனவிற்பனை முகவர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த பணிப்பின் காரணமாக இவர்களுக்கு ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு வகை வாகனங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பும் கிட்டியிருந்தது. தொலைபேசி அழைப்புக்கள் மூலம் பணிப்புரை கிடைத்ததும், வாகனங்கள் இவர்களைஅழைத்துச்செல்வதற்காக தயாராக இருக்கும். கத்தி, வாள் போன்ற பயங்கர ஆயுதங்களுடன்நவீன ஆயுதங்களும் தாங்கி தமதுஇலக்கு நோக்கி இவர்களது பயணம் சுமுகமாக இடம் பெறும்

இவர்களது பணிக்கு குறுக்கே யார் வந்தாலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு கச்சிதமாக தமது வேலையை முடித்துக் கொண்டு மீண்டும் பழைய இடங்களுக்கு திரும்புவர்.

அதன் பின்னர் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு செல்லும் பொலிசார் தடயங்களைத் தேடி அலைய வேண்டியது தான். தற்சமயம் எவராவது பொலிசாரின் பிடியில் சிக்கிக் கொள்ள நேரிட்டால் செல்வாக்கு பயன்படுத்தப்படுவதன் பேரில் பொலிஸ் நிலையத்திலிருந்து மீட்கப்படுவர் அதில் சிரமம் தோன்றின் நீதிமன்றில் விடுதலை பெறுவர். அதிலும் சங்கடம் ஏற்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டு விட்டால் வெசாக், சுதந்திரதினம் போன்ற நாட்களில் 'பொது மன்னிப்பு' மூலம் விடுதலை பெறுவோர் பட்டியலில் முதலிடம் நிச்சயமாக இருக்கும்.

கொலை குற்றச்சாட்டின்கீழ் ஆயுள் தண்டனை பெற்று சிறைக்கூடங்களில் இருந்த பிரபல பாதாள உலக கிரிமினல்களாக கோணாவெல சுனில், கல்கி பதிராஜ, சீனா அங்கோண சந்தரே ஆகியோரை விசேட பணிப்பின் பெயரில் உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜே. ஆர் ஜயவர்த்தன, ஆட்சியை அமைத்தவுடன் உத்தரவு விடுத்தார்.

இதேபோன்று கொலை குற்றவாளி என நீதிமன்றத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டஇருவர் உடனடியாக அதாவது அவர்கள் சிறைத்தண்டனை ஒரு வாரம் கூட அனுபவிக்கமுன்னர் விடுதலைசெய்யுமாறுடி.பி விஜேதுங்கா உத்தரவுவிடுத்தார் எனவே பாதாளஉலகமுகங்கள் மாறுமே தவிர நடவடிக்கைகள் மாறுவதற்கு சந்தர்ப்பங்கள் இல்லை என்றும் தொடர்ந்து ஐ. தே. க பாதாள உலக கிரிமினல்களை நம்பியே அரசியல் செய்ய வேண்டிய நிலை தோன்றலாம் அன்றி கிரிமினல்களின் கைப் பொம்மையாக கூட மாறினால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

**நிமலராஜன்**

இவர்கள் அரசியல் விடயங்கள் மட்டுமன்றி கள்ளக் கடத்தல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளிலும் அரசுடன் கைகோர்த்து செயற்பட்டுவந்துள்ளனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக தங்கக் கடத்தல் திட்டமிட்ட வகையில் கச்சிதமாக செய்யப்பட்டு வந்தது. ஒரு முறை கொழும்பு வரும் வழியில் கந்தான பொலிசார் நடத்திய திடீர் சோதனை ஒன்றில் கடத்தல் தங்கம் பிடிபட்டது. கடத்திக் கொண்டு வந்தவர் ஒரு சிரேட்ட அமைச்சரின் மகன் என்று கூறப்பட்டபோதும் அதனையும் பொருட்படுத்தாது பொலிஸ் நிலையம் வரை அவர் அழைத்துச் செல்லப்பட்டார். இதனைக் கேள்வியுற்ற அமைச்சர் தமது முழு செல்வாக்கையும் உபயோகித்து பொலிஸமா அதிபரிடம் உடன் விடுதலை செய்யவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். பொலிஸ்மா அதிபர் இசைவு தெரிவித்த போதும் அந்நிலையப் பொறுப்பதிகாரியும், பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபரும் மறுத்து விட்டனர்.

நீதிமன்றில் நிறுத்துகின்றோம். இவரது விடுதலை தொடர்பாக அங்கு பேசிக் கொள்ளலாம் எனப் பொலிஸ் அதிகாரிகள் திட்டவட்டமாக தெரிவித்துவிட்ட நிலையில், அமைச்சர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த பாதாள உலகக் குழுவொன்றுடன் தொடர்பு கொண்டார். தொலைபேசி அழைப்பு ஒன்றின்மூலம் நிலைமை விளக்கப்பட்டது. கந்தான பொலிஸ் நிலையத்திற்கு அக் குழுவின் தலைவன் உடனேயே விரைந்தான். அவனைப் பல வாகனங்கள் பின்தொடர்ந்தன. அமைச்சரின் மகன் வீடு வந்தான். கடத்திய பொருள்களும் பத்திரமாக வீடுவந்து சேர்ந்தன ஆனால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் இருப்பிடம் மர்மமாகியது. பிராந்திய பொலிஸ் மா அதிபர் கட்டாய இடமாற்றத்தின் கீழ் அம்பாறைக்கு அனுப்பப்பட்டார். இது பாதாள உலகின் செயற்பாட்டுக்கு ஒரு வகை மாதிரி மட்டுமே.

## நடவடிக்கை எடுக்க முடியா நிலை

பாதாள உலகினர் மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரசியல் வாதிகளின் திரைமறைவில் இடம்பெற்ற சம்பவங்கள் அம்பலத்திற்கு வந்துவிடும் என்ற அச்சத்தில் ஐ.தே.க சிக்கித் தவிக்கின்றது. எதிர்க்கட்சிகளை மிரட்டி வெற்றிக்கனியை சுவைக்கவும், சொத்துச் சேர்க்கவும் அரசியல்வாதிகள் பயன்படுத்திய பாதாள உலகம் இன்று அவர்களையே மிரட்டுவதாக மாறியுள்ளது. இது பகலில் தோண்டிய குழியில் இர

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கம்போடியாவில் தொடரும் சிக்கல்;

# நெருக்கடியில்ஐ.நா.வின்பெரும்அமைதித்திட்டம்

மீண்டும் கம்போடியா வின் எதிர்காலம் குறித்து பெரும் கவலை உலக அரசியல் அரங்கில் மூண்டிருக்கின்றது. அமைதிக்காற்று வீசும் என எதிர்பார்க்கப் பட்ட நாட்டில் மீண்டும் சூறாவளியே வீசும் அபாயம் தோன்றுவதாக அஞ்சப்படுகின்றது. ஏனென்றால் ஐ.நா வின் வரலாற்றிலேயே முதல் தடவையாக பெருத்த பணச் செலவில் (2.3 பிலியன் டொலர்) பெரும் தொகை ஆளணியினரை (22ஆயிரம்) ஈடுபடுத்தி ஒரு முன்னோடி அமைதித் திட்டமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு பாரிய அமைதி முயற்சியின் எதிர்காலம் இப்போது கேள்விக் குறியாகிவிட்டது. கடந்த வருடம் மே மாதம் ஐ நாவால் நடாத்தப் பட்ட தேர்தலில் பங்குபற்றாமல் பொல் பொட் தலைமையிலான கைமர்ரூச் (Khmer Rouge) போராளி அணி விலகியதே சிக்கலின் தொடக்கமானது. இப்போது என்னவென்றால் தனது பங்குபற்றல் இல்லாத கம்போடிய அரசை இராணுவ ரீதியில் தோற்கடித்து அதனை விழச்செய்யவே பொல்பொட் விரும்புவதாக நம்பப்படுகின்றது. கம்போடிய அரசராக மீண்டும்



நரோத்தம் சிகானூக்

நியமிக்கப்பட்ட நரோத்தம் சிகானூக்கின் முயற்சியால் இறுதியாக மேமாதம் 27ஆம் திகதி வடகொரியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. கம்போடியஅரசோ கைமர்ரூச் அணியை தோற்கடிக்க சருவதேச இராணுவ உதவியை இப்போது கோரியுள்ளது. சட்டரீதியாக இப் போராளி அமைப்பினை தடை செய்யப் போவதாக வேறு கூறிவருகின்றது. இப்படியாக இம்முறுகல் நிலைஅதிகரிப்பது வியட்நாம் போரில் சிக்க வைக்கப்பட்டு 25ஆண்டுகட்கு மேலாக அவலத்தையே வாழ்க்கையாக ஏற்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட கம்போடியமக்கட்கு பெருத்த இடியாகவுள்ளது.

குறிப்பாக ஏப்ரல் 20ஆம் திகதி பைலின் (Pailin) எனப்படும் கம்போடிய அரச துருப்புக்களால் கைப்பற்றப்பட்ட தமது முக்கியதளமொன்றை- தற்காலிக தலைமை பணியகமாக இருந்த நகரத்தை திடீர் தாக்குதல் ஒன்றின்மூலம் கைமர்ரூச் அணியினர் கைப்பற்றிய போதே நிலைமைகள் தெளிவானது. ஏனென்றால் கைமர்ரூச் அணியில் பிளவுகள் ஏற்பட்டதாக பல போராளிகள் தம்மிடம் சரண் அடைவதாக மொத்தத்தில் இவ்வணியினர் சிதைவுறுவதாக கம்போடிய அரசு இதுவரை கூறிவந்தது. இதற்கு ஆதாரமாகத் தான் பைலினை கைப்பற்றியதை பெரு வெற்றியாக பிரசாரம் செய்தது. ஆனால் ஒரு மாதத்திற்குள்ளே நிலைமைகள் தலைகீழாகியது. 5000 பேர் கொண்ட அரசபடையால் பாதுகாக்கப்பட்ட இத்தளத்தை 3000 போராளிகள் கடுமையாக தாக்கி பல தாங்கிகளை அழித்து 300க்கு மேற்பட்ட போர் வீரர்களைக்கொன்று பைலினை தம்வசமாக்கிய போது அவமானத்தால் கம்போடிய அரசு வெட்க நேரிட்டது. ஏனென்றால் தாய்லாந்திலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் இப்பகுதி இரத்தினக்கல் அகழும் பிரதானபகுதியாகும். எனவே இப்பகுதி திருப்பிக் கைப்பற்றப்பட்டமை பெரும் அதிர்ச்சியாக அமைந்ததுமட்டுமன்றி கைமர்ரூச்சின் போர்த்திறன் பற்றி கதை கதையாக செய்திகள் வெளிவர வேறு வழிவகுத்துவிட்டது. மாவோவின் பிரபல உத்தியான எதிரி முன்னேறும்போது பின்வாங்கி எதிரி நிலை கொண்டுதங்கும் போது தாக்கி தொல்லை கொடுத்து களைக்கும்போது தாக்குதல் நடாத்தும் உத்தியின்வெளிப்பாடே இத்தாக்குதல் என ஒரு ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். பினாங் பெங்கிலிருக்கும் ஓர் இராசதந்திரியோ மிக நகைச்சுவையாக பின்வருமாறு குறிப்பிட்டாராம்: ''அவர்கள் (போராளிகள்) மூட்டை முடிச்சுகளோடு முதலில் முன் கதவை பூட்டி விட்டு வெளியேறினர் பின் வந்தவர்களின் (அரசபடையினர்) தொடர்புகளை துண்டித்தனர் பின்னர் அவர்களை அழித்தனர்; இப்போதுபோனதுபோல திரும்பி வந்துவிட்டனர்'' என்றார். ஏனென்றால் அரச துருப்புக்களின் படையெடுப்பிற்கு பல நாட்களுக்கு முன்னரே கைமர்ரூச் அணியினர் தமது இராணுவ தளபாடங்களோடு அருகில் இருந்த காடுசட்கு பின்வாங்கி அரசபடைகள் பைலினை கைப்பற்றிய பின்னர் அவர்கள் விநியோகப் பாதைகளை தாக்கி துண்டித்து இறுதியாக திடீர் தாக்குதலை நடாத்தினர் என்பது இப்போது தெளிவாகிவிட்டது. எனவே இராணுவ ரீதியாக பொல்பொட் அணியினரை தோற்கடித்தல் என்பது இயலாத காரியம என்பதே பட்டறிவு என பலரும் இப்போது நம்புகின்றனர்.

இப்போது கம்போடிய அரசோ தனது தோல்விகட்கு தாய்லாந்தே காரணம் என மிகக் கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றது பொல்பொட் அணியினர்க்கு முழுமையான பாதுகாப்பும் வேண்டிய இராணுவ ரீதியான உதவிகளையும் தாய் இராணுவம் வழங்கி வருவதாகவும் பொல்பொட் தாய் இராணுவத்தின் உதவியோடு தாய்லாந்தில் தங்கி இருப்பதாகவும் கம்போடியா கூறிவருகின்றது. தாய்லாந்தின் பிரபல வணிக நிறுவனங்கள் தாய் இராணுவத்தின் பூரண ஒத்துழைப்போடு கைமர்ரூச்சின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் மிகுந்த இலாபம் தரும் இரத்தினக்கல் அகழ்வு பெறுமதி மிக்க மரவணிகத்தில் ஈடுபடல் என பெரும் வணிகத்தை நடத்திவருகின்றனர். பைலின பகுதியே இவற்றில் முக்கியமானது. எனவே 1200கிலோ மீற்றர் தாய் - கம்போடியாவின் எல்லைப்பகுதியில் என்ன நடக்கின்றது என்பது எல்லோர்க்கும்தெரிந்தவிடயமே. ஒரு ஆய்வாளரின் கருத்துப்படி பொல்பொட் அணியினரை ஆயுதங்களைக் கையளிக்கச் சொல்வதும் தாய்லாந்தின் வணிகர்களை இவ்வணிகத்தை நிறுத்துமாறு கேட்பது, இரண்டும் ஒன்றுதான். ஏனென்றால் இரண்டும் நடக்கப் போவதில்லை என்கிறார். 1989ஆம் ஆண்டு பைலின் பகுதியை கைமர்ரூச் அணியினர் கைப்பற்றிய பின்னர் இப்பகுதிகளில் மர, இரத்தினக்கல் வணிகத்தில் ஈடுபட தாய் வணிகர்கட்கு அனுமதி அளித்து அதற்குப் பதிலாக இவ்வணியினர் ஆயுதங்களும் 40 மிலியன் டொலர் பணமாகவும் பெற்றதாக அமெரிக்க டைம் இதழ் தெரிவிக்கின்றது. இப்போது தாய் அரசோ தான் எவ்வித உதவியும் பொல்பொட்டிற்கு செய்யவில்லையென்றும் இப்பகுதியில் மீண்டும் வெளிநாடுகளின் ஆயுதங்கள் வருவது மிக மோசமான நிலையையே உருவாக்கும் எனக் கம்போடிய அரசின் ஆயுத உதவிக் கோரிக்கையை மிகக் கடுமையாககண்டித்துள்ளது. எனவே கம்போடிய அரசோ தான் ஆசியான் அமைப்பில் அங்கம் பெறுவதன் மூலம் தனது பாதுகாப்பை உறுதிப் படுத்த எடுக்கும் முயற்சிகளையும் தாய் எதிர்க்கக் கூடும் என்றும் நம்பப்படுகின்றது.

எனவே இவ்வருடம் மே மாதத்தோடு 1 வருடம் நிறைவுற்ற கம்போடிய அரசின் நிலை தடுமாற்றமாகவே உள்ளது. இன்று கம்போடிய அரசில் நிலவும் ஊழல்கள், மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் அமைதியை கொண்டுவர முடியாத அதன் போக்கு பெரும் வெறுப்பையும் வளர்ப்பதால் அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பு வலுப்பதோடு மன்னர் சிகானூக்கின் கையில் அதிகாரத்தை அளித்து அமைதியைபொல்பொட்டோடு ஏற்படுத்த வேண்டும் என்கிற குரல் அங்கு வலுத்து வருவதாகக் கூறப்படுகின்றது. ஏனென்றால் கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற சிகானூக்கின்



நரோத்தம் ரணரித்

மூத்த மகன் ரணரித் (Rana riddth) 120 பேர் கொண்ட நாடாளுமன்றில் 58 இடங்களைப் பெற்றபோதும் அவரது புன்சிபெக் (Funcipec) கட்சியும் 51 ஆசனங்களை மட்டுமே பெற்ற முன்னைய சோவியத் சார்பு ஆட்சியாளரும் கம்போடிய மக்கள் கட்சியின் (CPP) தலைவருமான கூன் சென்னும் (Hunsen) இணைந்தே இணைப் பிரதமர்களாக இப்போது ஆட்சி நடத்துகின்றனர். இவ் விருவர்க்கு மிடையிலான போட்டி பொறாமைகள் இப்போது மோசமுறுவதாக கூறப்படுகின்றது. கூன்சென் கைமர்ரூச்சிற்கு எதிராக பெரும்போரையே நடாத்தியவர். ஆனால் றணரித்தின் புன்சிபெக் சட்சியோ தாம் பதவிக்கு வந்தால் பொல்பொட் அணியோடு அமைதியைகொண்டுவருவோம்என்று கூறியே வெற்றி பெற்றவர்கள். உண்மையிலே தேர்தலில் கைமர்ரூச் பங்குபற்றாத போதும், புன்சிபெக் வெற்றி பெறுவதை அவர்கள் விரும்பினார்கள் என்றும் கூறப்பட்டது. பதவிக்கு வந்தபின்னர் றணரித்தும் அவரது தந்தை சிகானூக்கும் பல தடவைகள் பொல்பொட்டின் பிரதிநிதியான கியூசம்பென்னோடு (Khieu Samphan) பல சுற்று பேச்சுக்கள் நடாத்தினர். போராளிகளை தேசிய இராணுவத்தில் இணைத்து தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளை பிற கம்போடியப் பகுதிகளோடு இணைத்து விட்டால் கம்போடிய அரசில் அமைச்சர்களாக, அதிகாரிகளாக ஆட்சியில் பங்குபற்றலாம் என்பதே கம்போடிய அரசின் நிலைப்பாடாகியது. ஆயினும் இன்றுவரை எதுவுமே பலனளிக்கவில்லை.

ஏனென்றால் பொல்பொட்டை நன்கு அறிந்தவர்கள் இத்தகையதொரு ஏற்பாட்டுக்கு அவர்சம்மதிக்கார் என்றே கூறுகிறார்கள். அவர் ஒரு விசித்திர மனிதர். பல ஆண்டுகளாக அவர் நடமாட்டம் பற்றிஎதுவுமேதெரியவரவில்லை. அவருக்குப்பதிலாக அவரது கட்சியானசனநாயக கம்பூச்சியா (Democratic Kampuchea-கைமர்ரூச்அணியின்உத்தியோகபூர்வ பெயர் இதுவே) வின் பெயரளவு தலைவராக இருக்கும் கியு சம்பென்னையே உலகம் அறியும் 'முதல் சகோதரன்' (Brother Number one) என தனது போராளிகளால் அழைக்கப்படும் இவர் இன்று மிக கட்டுப்பாடான ஒழுங்கான முறையில் தனது போராளி அணியை நடாத்தி வருவதை இவரது எதிரிகளே ஏற்றுக் கொள்கின்றனர். இவரது அரசியல் நுணுக்கத்தை பல்வேறு தரப்பாலும் எரிச்சலோடும் கோபத்தோடும் ஏற்க வேண்டிய நிலையே இன்றுள்ளது. ஏனென்றால் அமைதியாக செழிப்பாக இருந்த கம்போடியாவை வியட்நாம் போருக்குள் சிக்க வைத்து அநீதியான முறையில் குண்டுவீசி அமெரிக்கா அழித்ததை எதிர்த்தே 1975 அளவில் பொல்பொட் பதவிக்கு வந்தார். பின் அவரது தீவிர பொதுவுடமை வாதக் கருத்துக்களின் அடிப்படையில் ''வருக்க எதிரிகளை அழித்தல்'' என்கிற போர்வையில் 10 இலட்சம் மக்களைக் கொன்று கம்போடியாவை கொலைக்களமாக்கிய போது உலகம் மட்டுமல்ல, இவர்க்கு அதரவான வியட்நாமும் விழித்துக்கொண்டது. எனவே 1979 ஆம் ஆண்டளவில் வியட்நாம்படைகளால் வெளியேற்றப்பட்டு ஓரங்கட்டப்பட்ட போதும் இரு வல்லரசுகள் முறுகல் நிலையை பயன்படுத்தி அமெரிக்க, சீன, மேற்குக ஆசியான் நாடுகள் உதவியோடு மிகப்பெரிய போராளி அமைப்பாக தனது அணியை வளர்த்ததோடு வியட்நாம் உதவியோடு செயற்பட்ட கூன்சென் அரசுக்கு எதிரான போரின் பெரும் பகுதியை தானே மேற்கொண்டார். எனவே கம்போடியா ஆட்சி மீண்டும் தனது கைக்கு வர வேண்டும் என்றே பொல்பொட் விரும்புகிறார். வியட்நாம் படைகள் வெளியேற 1991-ம் ஆண்டு பரிசில் மேற்கொள்ளப்பட்ட கம்போடிய அமைதி மாநாட்டிலும் பின் ஐ. நாவின் முயற்சிகளிலும் பங்குபற்றி தனது பழைய மனித உரிமை மீறல்களை உலகை மறக்க வைத்து சட்டரீதியான அங்கீகாரத்தையும் பெற்றார். எனினும் வியட்நாம் படைகள் இன்னமும் இருப்பதாக கூறிக் கொண்டு ஐ. நாவின் அமைதி முயற்சியிலிருந்து வெளியேறி மீண்டும் தனது போரை தொடங்கி இன்று பலமிக்க நிலையில் பொல்பொட் இருக்கிறார். எனவே தான் இத்தகைய நிலையில் கம்போடியா இணைப்பிரதமர்களால் போரன்றி அமைதி வராது என்கிற நிலையிலே இன்று கம்போடியாவில் சிகானூக்கை அரச தலைவராக்க கோரி பெரும் ஆதரவு அலை எழும்புவதாக கூறப்படுகின்றது.

இத்தகைய நிலையிலே தாம் விரும்புகிற வகையில் தேசிய அரசில் தமக்கு உரிய பங்கு றணித்தாலும் கூன் சென்னாலும் அளிக்கப்பட மாட்டாது என்றே பொல்பொட் நம்புவதாக தெரிகின்றது. அண்மையில் கட்சியின் உட்சுற்றுக்கு விடப்பட்ட- இரகசியமாக வெளியாக்கப் பட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''இதுவரை நாங்கள் புன்சிபெக் கட்சி பற்றி தவறாகவே கணித்து விட்டோம். தேர்தலின் போதும், தேர்தலின்



பொல்பொட்

பின்னரும் புன்சிபெக் பூரண அரசியல் அதிகாரம் பெறுவதை நாங்கள் ஆதரித்தோம். ஆனால் இப்போது நாங்கள் நம்பியதுபொய்யாகிவிட்டது. இப்போது உண்மையாக புன்சிபெக் கட்சி வியட்நாமோடும் அதன் ஆதரவாளரோடும் வேறு கூட்டணிகளோடும் (மேற்கத்தைய நாடுகள்) கூட்டுச்சேர்ந்து எம்மை சனநாயக கம்பூச்சியக் கட்சியை அழிக்க முனைவது மிகத் தெளிவாகி விட்டது. இதுவரை றணரித்தும் கூன்சென்னும் எம்மோடு உண்மையான இணக்கத்திற்கு வரவிரும்பவில்லை. எனவே போர்க்களத்தில் இவர்கட்கு இராணுவ ரீதியாக எதையும் வெல்ல முடியாது என்பதை நிரூபிக்க வேண்டும்'' என்கிறது இவ் உட்சுற்று அறிக்கை.

எனவே கம்போடியாவின் இன்றைய நிலை என்னவென்றால் போர்க்களத்தில்கம்போடிய அரச படைகள் மேலும் தோல்வியை தழுவினால் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நரோத்தம் சிகானூக்கின் உடல்நிலை திருப்திகரமாக இருந்தால் ஆட்சி மாற்றத்திற்கான கிளர்ச்சி வலுவடையும்என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனென்றால் பொல்பொட்டின் நிலைகளைபுரிந்து இணக்கமாக போகும்ஆற்றல் மன்னர் சிகானூக்கிற்கு மட்டுமே இருப்பதாக கருதப்படுகின்றது. எல்லாக் காலத்திற்கும் பொருத்தமான இவர் 1975 களில் பொல்பொட்

(11 ஆம் பக்கம் பார்க்க)

பாலகுமாரன்

# இரண்டாம் கட்ட ஈழப்போரின் நா

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகி இன்றுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன- இக்காலப் பகுதி இலங்கையின் இராணுவ, அரசியல் வரலாற்றில் முக்கியமான பகுதி என்பதில் கேள்விக்கே இடமில்லை. இராணுவ, அரசியல் ரீதியாகப் புதிய பரிணாமங்களைப் பெற்ற இக்காலப் பகுதியை மதிப்பீடு செய்தல் என்பதும் இலகுவான காரியமல்ல.

1990 யூன், 10ஆம் திகதி கிழக்கில் ஆரம்பித்த இரண்டாம் கட்ட ஈழப்போரானது ஓரிரு தினங்களுக்குள் வடக்கு கிழக்குப் பகுதி எங்கும் பரவியது. இதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்று வந்த பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தன. இதன் பின்னர் பேச்சுவார்த்தைகள், போர்நிறுத்தங்கள் என்ற பேச்சே இன்றி கடந்த நான்கு ஆண்டும் போராண்டாகவே கழிந்துள்ளது- ஒப்பீட்டு ரீதியில் இது ஒரு நீண்ட காலப் பகுதியே.

இந்நான்கு போராண்டும், இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பல மாற்றங்களையும், பரிணாமங்களையும் கொண்டவை. இராணுவத்தின் விரிவாக்கம், நவீனப்படுத்துதல், போர் யுக்திகளில் மாற்றம், கட்டமைப்புகளில் மாற்றம் என சிறிலங்கா தனது இராணுவ பலத்தை விஸ்தரித்துக் கொண்டு சென்றவேளையில் விடுதலைப் புலிகளும் போராடும் யுக்திகளைக் காலத்திற்கும், பிரதேசத்திற்கும் ஏற்ற வகையில் மாற்றி அமைத்துக் கொண்டே சென்றனர்.

இந்த நிலையில், கடந்த நான்கு போராண்டின் சம்பவங்களைப் பட்டியல் இடுவது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. 6000க்கும் மேற்பட்ட இராணுவத்தினரையும் 4000க்கும் மேற்பட்ட புலிகளையும், நூற்றுக்கணக்கான தாக்குதல்களையும் பட்டியல் இடுவதைவிட கடந்த நான்கு போராண்டிலும் சிறிலங்கா அரசின் குறிக்கோள்கள் எந்தளவில் நிறைவேறியது என்பதும், விடுதலைப் புலிகளின் போர் யுக்திகள் எந்தளவிற்கு சிறிலங்கா இராணுவத்தின் நோக்கங்களை எதிர்கொண்டன என்பதுமே முக்கியமாக நோக்கப்படவேண்டியுள்ளது.

## கிழக்கில் முதற்படையெடுப்பு

போரைத் தொடங்கிய சிறிலங்கா அரசின் முதற் குறிக்கோளாக கிழக்கு மாகாணமே இருந்தது. போர் தொடங்கிய ஒரு வார காலத்திற்குள்ளேயே மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமையில் ஒரு பெரும் படை எடுப்பு கிழக்கில் நடத்தப்பட்டது. பெரும் அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறிய இராணுவத்தினருடன் இணைந்து சிங்களக் காடையர்களும் முஸ்லிம் காடையர்களும் தமிழருக்கு எதிராகப் பெரும் இனப் படுகொலை ஒன்றையே நடத்தினார்கள்.

ஆயினும், கிழக்கில் சிறிலங்கா இராணுவம் நினைத்தது போன்று இலகுவில் பெரும் வெற்றியை ஈட்டிவிட முடியவில்லை. போர் ஆரம்பித்து இரண்டு மாதங்களின் பின்னர் கிழக்கு மாகாணம் தமது பூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக சிறிலங்கா இராணுவம் அறிவித்தபோதும், அதன் பின்னர் விடுதலைப்புலிகள் தொடுத்த அதிரடித்தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு வியூகத்தையே மாற்றும் நிலைக்கு கொண்டு

சென்றது. அதிலும் 1992இல் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடி முறையில் அமைந்தகரந்தடித்தாக்குதல்கள் இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை விளைவிப்பனவாக இருந்தன.

பாகம் எனக் கருதப்படும் யாழ். குடாநாட்டுப் பகுதியையும் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் நோக்குடையவைகளாக வேஇப்படை எடுப்புக்கள் இருந்தன. இவ்விரு பகுதிகளும் கேந்தி

பலவாரங்களாக இடம்பெற்ற இம்மோதல்களின்போது இலங்கைத் தீவினுள் இரு பலம் பொருந்திய இராணுவ அமைப்புக்கள் உருவாகியிருந்தமை விமர்சகர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



ஒப்பரேசன் யாழ்தேவியில் புலிகளிடம் அடிவாங்கியடாங்கி

இருப்பினும் கிழக்கில் இராணுவத்தின் கை இந் நான்கு ஆண்டுப் போரின் பின்னர் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. ஆனால் இராணுவத்தரப்பு குறிப்பிடுவதுபோன்று கிழக்கு மாகாணம் பூரணகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுஎன்பதுஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. இராணுவம் தற்பொழுது அப்பகுதியில்மேற்கொள்ளும் தேடுதல், சுற்றிவளைப்புக்கள், பெயரிட்டு மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகள் என்பன விடுதலைப்புலிகள் அப்பகுதியில் நிலைத்திருப்பதையே காட்டுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட புதிய எம்.பி. யான யு.எல்.எம். முகைதீன், மட்டக்களப்பில் 40 வீத பிரதேசமும், திருமலையில் 50 சதவீத பிரதேசமும், அம்பாறையில் 20 சதவீத பிரதேசமும் இன்னமும் புலிகளின் கைவசம் இருப்பதாகத் தெரிவித்துள்ளமை இராணுவத்தினதும், அரசாங்கத்தினதும் கூற்றுக்கு முரணானது என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தப்பாடானது.

ரப் பகுதிகளாகவும், புலிகளின் வலுவுள்ள நிலைகளாகவும்இராணுவத்தால் கருதப்பட்டது. இப்பிராந்தியங்களில் பெறப்படும்வெற்றிகள் போரின் இறுதிவெற்றிகளாகவும் சிறிலங்கா இராணுவத்தாலும், அரசாலும் கருதப்பட்டது.

ஆனால் வடக்குப்போர் முனைகள் கடந்த நான்குவருடங்களில் எப்பொழுதுமே சிறிலங்கா இராணுவத்திற்கு பின்னடைவுகளையும் தோல்விகளையும் வழங்கியவையாகவே இருந்தன. இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய ஆரம்பகாலத்திலேயே கொண்டச்சி, கொக்காவில் இராணுவ முகாம்கள் புலிகளிடம் வீழ்ச்சிகண்டன ஆயினும்1990 செப்டம்பரில்யாழ். கோட்டை இராணுவமுகாமும், நவம்பரில் மாங்குளம் இராணுவ முகாமும் வீழ்ச்சி கண்டமை புலிகளின் இராணுவ வரலாற்றில் பெரும் சாதனையாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதே சமயம் 1991இல், இடம்பெற்ற சிலாபத்துறை

இருதரப்பிலும் பெரும் உயிரிழப்பினை ஏற்படுத்திய இம்மோதல்களின் பின்னர், இரு பகுதியினருமே தமது போர் யுக்திகளை மாற்றி அமைப்பதுபற்றி சிந்தித்தனர். இதன் பின்னர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாற்றியமைத்த புதிய போர் யுக்தியானது, 1992ஆம் ஆண்டில் அவர்களுக்குபெரும் வெற்றியாண்டாக அமைவதற்கு வழிவகுத்ததெனலாம். இவ் ஆண்டு இராணுவத்திற்குப் பெரும் இழப்பையும், மனக் கிலேசத்தையும் ஏற்படுத்திய ஆண்டாக அமைந்தது.

மரபுவழி போர்முறையும் இல்லாது, கெரில்லாபாணியின் உயர் நிலையாக அமைந்த இத்தந்திரோபாயமானது இராணுவத்திற்கு பெரும் உயிர், மற்றும்தளபாட இழப்புக்களையும் ஏற்படுத்தியது. தொடர் காவலரண்கள் ரோந்து சென்ற இராணுவ அணிகள் விடுதலைப் புலிகளின் முக்கிய குறியாக இருந்தது.

புலிகளின் இத்தாக்குதல் திட்டத்தினை, இராணுவத் தரப்புஎதிர்கொள்ளமுடியாத



பூநகரியில் கைப்பற்றிய டாங்கியுடன் புலிகள்

கிழக்கின் நிலை இவ்வாறிருக்க கடந்தநான்கு போராண்டிலும்சிறிலங்கா இராணுவத்தின் பெரும்படை எடுப்புக்கள்யாவும் வடமாகாணத்திலேயே இடம் பெற்றன. தமிழர் தாயகத்தின் இருதய நிலப்பரப்பான மணலாற்றுப் பகுதியிலும், தமிழர் தாயகத்தின் தலைப்

இராணுவமுகாம் மீதான தாக்குதலும் ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலும் விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முக்கிய பரிணாமத்தைக் கொண்டன. சிறிலங்கா இராணுவமும்விடுதலைப்புலிகளும் இருமரபுவழி இராணுவமாக மோதிக் கொண்டன.


ஒரு நிலையே உருவாகியது. விடுதலைப் புலிகளின் போர் யுக்திகள் எதிர்த்தரப்பினரே கண்டு ஆச்சரியம் கொள்ளத் தக்க நிலையில் இருந்தன. இவ்வாண்டில் 1500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட ஆயிரக் கணக்கானோர் இராணுவத்தை விட்டு ஓடினர்.

இதேசமயம் வட பகுதிப் போர் முனையானது இரு தரப்பினரையும் பொறுத்து தாக்குதல் - பாதுகாத்தல் என்பதன் அடிப்படையில் மாறி மாறி இடம் பெறும் ஒன்றாக இருந்தது. ஆனால், இதில் இராணுவத்தின் முக்கிய குறிக்கோள் மேற்குறிப்பிட்ட-யாழ். குடாநாடு, மணலாறு ஆகிய- இரு பிரதேசங்களையும் கைப்பற்றுதல் அல்லது முற்றுகை இடுதல் என்பதன் அடிப்படையிலேயேஇருந்தது. விடுதலைப்புலிகளின் நடவடிக்கை என்பது, அதற்கு எதிரானதாக பிரதேசத்தைக் காப்பாற்றுதல், முற்றுகையை உடைத்தல் என்பதே முக்கிய குறிக்கோளாக இருந்தது.

## மணலாற்று போர்கள்

கடந்த நான்கு ஆண்டு காலத்திலும் மணலாறு பிரதேசத்தின் மீது சிறிலங்கா இராணுவம் சிறிய பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும், 1991 ஒகஸ்ட் மாதத்தில் மேற்கொண்ட 'ஒப்பரேசன் மின்னல்' இராணுவ நடவடிக்கையும், 1992இல்மேற்கொண்ட 'ஒப்பரேசன் சிக்சர்' இராணுவ நடவடிக்கையும் முக்கியமானவையாகும்.

ஆனால் இவ்இரு இராணுவ நடவடிக்கைகளும், விடுதலைப்புலிகளின் பலமான பதிலடி காரணமாக தோல்வி



அராலியில் புலிகளின் கண்

யில் முடிவடைந்தது. ஒப்பரேசன் மின்னலின்போது மூன்று வாரங்களுக்கு மேலாகப் போர் நீடித்ததாயினும் இராணுவம் பலத்த இழப்புக்களுடன் பின் வாங்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

இதே வேளை ஒப்பறேசன் சிக்சரின் போது இராணுவம் எதிர்பாராத வகையில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட அன்றே இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலேயே பலமான பதிலடியைப் பெற்றுக் கொண்டது. இதில் பல இராணுவத்தையும் ஆயுத தளபாடங்களையும் பறிகொடுத்த இராணுவத்தின் இம் முயற்சியானது முதல் கோணல் முற்றும் கோணல் என்ற நிலையிலே முடிவடைந்தது,

## யாழ். குடா நாட்டிற்கான சமர்கள்

அடுத்ததாக இராணுவத்தின் இரண்டாவது குறிக்கோளான யாழ் குடாநாட்டின் மீதான படையெடுப்புத் திட்டம் 1991 ஆம் ஆண்டின் இறுதியிலேயே ஆரம்பித்து விட்டதெனலாம். ஒப்பரேசன் வலம்புரிமூலம் 1991 ஒக்டோபர் 20 ஆம் திகதி தீவுப்பகுதிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த இராணுவம் எப்பொழுதும் எந்த வேளையிலும் யாழ் நகருக்குள் பிரவேசிக்கத் தயாராக

# நான்காம் ஆண்டின் முடிவில்....

இருப்பதாகவும் அறிவித்தது. நாம் யாழ் நகரிலே இருந்து 1.5கிமீற்றர்தொலைவிலேயே உள்ளோம். எப்பொழுதும் யாழ். நகரிற்குள் பிரவேசிக்க முடியும் என அப்போதைய இராணுவத்தளபதி ஹமில்டன்வனசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, ஒப்பரேசன்வலம்புரியின் இறுதிக்கட்டமாக பூநகரிப் பாதையும் இராணுவத்தால் ஒக்டோபர் 22 இல் மூடப்பட்டது. இந் நிலையானது குடாநாட்டை முற்றுகையிடும் ஒரு பகுதி முடிந்ததாகவே கருதப்பட்டது.

யாழ்.குடாநாட்டை முற்றுகையிடும் அடுத்தகட்டம்,ஒப்பரேசன்பலவேகய11 இன்மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. இதன்மூலம் இராணுவ வேலி ஒன்று கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி என்பனவற்றில் இருந்து போடப்பட்டது. பல ஆயிரக்கணக்கான துருப்புக்கள்பயன் படுத்தப்பட்டனர். இவ் நடவடிக்கையைத் தொடர்ந்து''புலிகளை போத்தலின் வாய்க்குள் அடைத்து விட்டோம்'' எனச் சிறிலங்கா இராணுவத்தரப்புக் கூறியது இதன் மூலம் முற்றுகையின் பெரும்பகுதி நிறைவேறியதாகக் கொள்ளப்பட்டது.

ஆயினும்இதன்இறுதிக்கட்டமாகஒப்பரேசன் 'யாழ்தேவி' மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடம் செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையா



ின் கண்ணியில் சிக்கிய ஜீப்


னது புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலினால்பின்வாங்க வேண்டிவந்தது. ஒரு படைநகர்த்தலின் போது இதுவரை காணாத பின்னடைவு ஒன்றை ஒப்பரேசன் யாழ் தேவியின்போது சிறிலங்கா இராணுவம் சந்திக்கவேண்டி வந்தது. டாங்கிகள், கவசவாகனங்கள் என்பவற்றோடு சுமார் 150 சிப்பாய்களையும் கனிஷ்ட நிலை அதிகாரிகள் பலரையும் அது இழந்தது.

இந்த நிலையில் இராணுவத்தினரின் இரு பிரதான குறிக்கோளும் நான்காவது போராண்டின் முற்பகுதியிலேயே பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தன என்றே கூறமுடியும். ஆனால் இத்தோல்விகள் தனியாகபடை எடுப்பின்போது எதிர்த்துப் போரிட்டதன் விளைவாக விடுதலைப்புலிகளுக்குக்கிடைத்தவை என்று கொள்ள முடியாது. சுமார் இரண்டுஆண்டுப்போரில் தொடர்ந்து பெறப்பட்ட வெற்றிகளின் ஒட்டுமொத்தமான விளைவு என்றே கொள்ளவேண்டும்.

## புலிகளும் மணலாறும்

இதில், மணலாற்றைப் பொறுத்தவரை, ஒப்பரேசன் மின்னல், ஒப்பரேசன் சிக்சர், என்பவற்றில் 'புலிகளின் பலமான எதிர்த்தாக்குதல்களே இராணுவத்தினரின் பின்னடைவுக்குக்காரணமாக இருப்பினும், 1991டிசம்பரில்

இருந்து - கொக்குத்தொடுவாயில் 25 இராணுவம் பலி - 1992 டிசம்பர் வரையில் - கொக்குத்தொடுவாய்க்கும் கோட்டைக் கேணிக்குமிடையில் 40இராணுவம் பலி - விடுதலைப்புலி



பூநகரி தளத்தில் கைப்பற்றிய ஆயுதத்துடன் புலிப் போராளி

கள்மேற்கொண்ட அதிரடி தாக்குதல்களே இப்பகுதியில் ராணுவப் பின்வாங்கல்களுக்குக் காரணமாக அமைந்தன.

இதன் உச்சக்கட்டமாக அமைந்ததே 1993இல் மண்கிண்டி மலை இராணுவ முகாமைப் புலிகள் தகர்த்து எறிந்தமையாகும். மண்கிண்டி மலை இராணுவ முகாம்தகர்ப்பானதுதனியாக ஒரு இராணுவ முகாம் வீழ்ச்சி என்பதைவிட சிறிலங்கா அரசின்கொள்கைக்கு விழுந்த பலமான அடியாகும்.

மணலாற்றுப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு சிறிலங்கா அரசு எத்தகைய முக்கியத்துவம் கொடுத்தது என்பதும் அங்கு ஏற்பட்ட தோல்விகள் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தின என்பதும் ஒப்பரேசன்சிக்சரின்பின்னரும் மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சியின் பின்னரும் சிறிலங்கா இராணுவக்கட்டமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்களைக் கொண்டே புரிந்து கொள்ளமுடியும். ஒப்பரேசன் சிக்சரின் பின்னர்கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திடம் இருந்துமுப்படைத்தள

பதிகளிடமும்மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின்பின்னர்கூட்டுப்படைத்தலைமையகத்திடம் இருந்து பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவிடமும் அதிகாரங்கள் மாற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## யாழ். முற்றுகையும் புலிகளும்

இதேபோன்றே யாழ்.குடாநாட்டின்முற்றுகையும் நீண்டதொருசெயற்பாட்டின் விளைவாகவே புலிகளால் உடைக்கப்பட்டது.1991 இல் ஒப்பரேசன்வலம்புரி1, 1992 இல்ஒப்பரேசன் பலவேகய II ஆகியவற்றின் போதும் விடுதலைப்புலிகள் இராணுவத்துடன் பெரும்மோதல்களைத் தவிர்த்த போதும் அவர்கள் இம்முற்றுகைக்கு எதிராக மேற்கொண்ட இருதாக்குதல்கள் இராணுவத்தினரின் திட்டத்தையே கேள்விக்குரியதாக்கியது.


இதில் யாழ்குடாநாட்டின் மீதான இறுதியுத்தத்திற்கு இரு தினங்கள இருக்கையில் அராலி பகுதியில்இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றாகும். இதில் சிறிலங்கா இராணுவத்தின் நம்பிக்கை நட்சத்திரமான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது இராணுவ கடற்படை அதிகாரிகள் கொல்லப்பட்டமை முக்கியமானதாக அமைந்தது. இத்தாக்குதலானது யாழ். குடா நாட்டின் மீதான இறுதித் தாக்குதலை காலவரையறையின்றி ஒத்தி வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல், சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தில் நிரப்பமுடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியது என்று துணிந்து கூறலாம்.

இதேசமயம் இதேவருடம் ஒக்டோபர் இரண்டாம் திகதி விடுதலைப் புலிகள் கட்டைக்காட்டு இராணுவ மினி முகாம் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் யாழ். குடாநாடு மீதான தாக்குதலை மட்டுமல்ல, யாழ். குடா

நாடு முற்றுகை குறித்த கேள்வியையும் எழுப்பியது. இது இராணுவக் கட்டமைப்பில் மீண்டும் மாற்றத்தைக் கொண்டுவந்தது. அதாவது 1992 மார்ச்சில், கூட்டுப் படைத் தலைமையகத்திடம் இருந்து முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் முப்படைத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இத்தோல்விகளின் பின்பும் யாழ்ப்பாணத்தின் மீது இராணுவமும், சிறிலங்கா அரசும் குறியாகவே இருந்தன. மண்கிண்டிமலையில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஏற்பட்ட இராணுவக் கட்டமைப்பு மாற்றத்துடன் ஒரு பெரு வெற்றி ஈட்டப்பட வேண்டும் எனப் புதிதாக ஜனாதிபதிப் பதவி ஏற்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இராணுவத்திற்கு நிர்ப்பந்தம் கொடுத்தார்.

இதன் அடிப்படையில், யாழ்ப்பாணத்திற்கான இறுதி முற்றுகையையும், படையெடுப்பையும் நோக்கமாகக் கொண்டு ஒப்பரேசன் யாழ் தேவி கடந்த ஆண்டு செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் ஒப்பரேசன் யாழ் தேவி எதிர்பாராத படு தோல்வியை அடைந்த போது, யாழ்ப்பாணத்தின் முற்றுகையும் இறுதித் தாக்குதலும் கேள்விக்குள்ளானவையாக மாறியது.



கடற் புலிகளின் ரோந்துப் படகொன்று

## கடற்புலிகளின் பிரவேசம்

இதேசமயம் கடற்புலிகளின் பிரவேசமும் வளர்ச்சியும் யுத்தத்தை புதியதொரு கட்டத்திற்குக் கொண்டு சென்றது. இறுதியாக யாழ். குடாநாட்டின் நுழை வாயிலாக இருந்த யாழ். கடல்நீரேரியில் சிறிலங்காகடற்படையால் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து கடற்புலிகளின் பிரவேசம் முக்கியம்வாய்ந்ததாக மாறியது. (இதற்கு முன்னரே கடற்புலிகள் பல தாக்குதலை வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பினும் கிளாலிக் கடற்பரப்பே அவர்களின் இராணுவ முக்கியத்துவத்தை முதலில் வெளிப்படுத்தியது). இதன் பின்னர் கிளாலிக் கடற்பரப்பில், கடற்புலிகளும், சிறிலங்கா கடற்படையும் அடிக்கடி மோதிக் கொண்டன. ஆனால் 1993, மே மாதத்தில் கடற்கரும்புலிகள் கிளாலிக் கடலில் கடற்படையினரின் இரு நீருந்து விசைப்படகுகளை மூழ்கடித்ததைத் தொடர்ந்தும், பருத்தித்துறை கடற்பரப்பில் சுப்பர் டோறா படகு ஒன்றை மூழ்கடித்ததைத் தொடர்ந்தும் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. யாழ் கடல்நீரேரியில் கடற்புலிகளின் கை ஓங்கத் தொடங்கியது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு நவம்பரில் ஒப்பரேசன் தவளைவிடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டதுபூநகரி இராணுவ - கடற்படை கூட்டுப் படைத்தளம் மீதான இத் தாக்குதல் சிறிலங்கா இராணுவம் இந் நான்காண்டுப் போரில் என்றுமே சந்தித்திராத தோல்வியாக அதற்கு அமைந்தது. இராணுவக் கட்டமைப்பு முற்றாகவே சிதைந்து போக, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா பதவிவிலகவும், இராணுவக் கட்டமைப்பை மாற்றி அமைக்கவேண்டிய அவசியத்தையும் இத் தாக்குதல் ஏற்படுத்தியது.

இதேசமயம், யாழ் குடாநாட்டின் மீதான இறுதித் தாக்குதல் திட்டம் காலவரையறை இன்றி பின்போடவும், முற்றுகைத் திட்டம் தோல்வியையும் தழுவிக் கொண்டது. யாழ் கடல்நீரேரி கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இந்நான்கு போராண்டைப் பற்றி இராணுவ ரீதியாகக் கூறுவதானால் கிழக்குப் போர் முனையில் சிறிலங்கா இராணுவம், சில அனுகூலங்களை அனுபவித் திருப்பினும், வடக்குப் போர்முனையில் அது பல பின்னடைவுகளையும் தோல்விகளையுமே சந்திக்க வேண்டியிருந்தது. வடக்குப் போர் முனையில் சந்தித்த தோல்விகளும், இழப்புக்களும் சிறிலங்கா இராணுவத்தை மட்டுமல்ல அரசையே உலுப்பும் அளவிற்கு சென்றதெனலாம். இந்த வகையில் இந்நான்காண்டுப் போர் சிறிலங்காவில் அரசியல், பொருளாதார ரீதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பும் மிகவும் அதிகமாகும்?

**ஜெயராஜ்**

இப்போராண்டு நான்கிலும் சிறிலங்கா அரசியலில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள், அதனால், இன்று எழுந்துள்ள அரசியல் நெருக்கடி என்பவை எல்லாம் ஏதோஒருவகையில் போரின் தாக்கங்கள் என்றே கொள்ள முடியும், இந்த வகையில் 1991 இல் இடம் பெற்ற பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன்விஜேரட்ணா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதில் இருந்து கூட்டுப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றகுண்டுவெடிப்பு, கடற்படைத்தளபதி கிளான்சி பெர்னான்டோ மீதான தற்கொலைத் தாக்குதல், ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணித் தலைவர் லலித் சுட்டுக் கொல்லப்பட்ட

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா; தலைவியின் தோல்வியா? தாயின் அரவணைப்பா?

**இளையவன்**

எதிர்க் கட்சிகளின் சார்பில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் நியமனத்தை திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா பெறுவார் என்பது இப்போது தெளிவாகிவருகின்றது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், பாராளுமன்ற ஆட்சி முறைக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்வது என்றும், அதன் பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வது பற்றி சிந்திக்கலாம் என்றும் கூறிவந்த திருமதி சிறிமாவோ தமது மகளுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொள்வது தொடர்பாகப் பச்சைக் கொடிகாட்டியுள்ளார். சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு திருமதி சந்திரிகா உயர்த்தப்பட்டதும், திருமதி சந்திரிகா தமது திறமையையும் ஆற்றலையும் நிரூபித்துள்ளார் என்று திருமதி சிறிமாவோ புகழாரம் சூட்டியிருப்பதும் இந்த நிலைமையை கோடி காட்டுவதாகும். எனினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஆசையிலிருந்து திருமதி சிறிமாவோ இன்னமும் முற்றாக விடுபட்டு விடவில்லை என்பதையும் அவ்வப்போது கிடைக்கும் செய்திகள் புலப்படுத்தத் தவறவில்லை எனலாம்.

திருமதி சந்திரிகாவின் ஆளுகையின் கீழ் தாம் ஓரங்கட்டப்பட்டு விடலாம் என்று அஞ்சும் திருமதி சிறிமாவோவின் விசுவாசிகளான மூத்த உறுப்பினர்களின் முட்டுக்கட்டைகள் ஒருபுறமும், திருமதி சந்திரிகா தான் ஜனாதிபதி தேர்தலுக்கான பொருத்தமான வேட்பாளர் என்று நம்பிக்கை கொண்டிருந்தவர்களில் பலரும் கூட திருமதி சிறிமாவோவிடம் விட்டுக்கொடுக்கும்படி கோரும் துணிவில்லாமல் இருந்தது மறுபுறமும், குழு - 5 எனப்படும் 'ஹெல உறுமய'க்களின் எதிர்ப்பு இன்னுமொரு புறமும் நீடித்துக் கொண்டு வரும் நிலையிலும் கூட ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளராக நியமனம் பெறும் வாய்ப்பை திருமதி சந்திரிகா பிரகாசமானதாகவே ஆக்கிக் கொண்டிருக்கிறார். பின்னணியில் இருந்து கொண்டே திட்டமிட்டுப் பணியாற்றி தமது இலக்குகளை இலகுவாக எட்டக் கூடியவர் என்பதை திருமதி சந்திரிகா இதன் மூலம் நிரூபித்து வருகிறார் என்றே கொள்ள முடியும். இன்னும் இந் நியமனத்தைப் பெறுவதற்காக திருமதி சந்திரிகா தரப்பில் எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும், திருமதி சிறிமாவோவினதும் அவரது விசுவாசிகளினதும் மனம் கோணாமல் அதே வேளை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் நியமனம் பெறுவதிலிருந்து திருமதி சிறிமாவோவைப் பின் தள்ளும் வகையில் காரியங்கள் இடம் பெறுகிறது என்பதையும் கவனிப்பது இங்கு பயன் பொருத்தமானதாகும்.

## சந்திரிகா தரப்பின் முயற்சிகள்

தென் மாகாண சபைக்கான தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஈட்டிய வெற்றியைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சித் தலைமையின் முடிவுக்கு அப்பாற்பட்ட வகையில் திருமதி சந்திரிகாவே ஜனாதிபதி தேர்தலுக்கான எதிரணிகளின் வேட்பாளர் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்களே கருதும் அளவுக்கு நிலைமை இட்டுச் செல்லப்பட்டது. திருமதி சந்திரிகாதான் எதிரணி தரப்பு ஜனாதிபதி வேட்பாளர் என்பதைப் பிரபல்யப்படுத்துவதில் 'ராவய' வார இதழ் முன்னணிப் பாத்திரத்தை வகித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மே 21ம் திகதிய சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளராக திருமதி சந்திரிகாவை நியமிப்பது தொடர்பாக பாராளுமன்ற மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் கையெழுத்துக் கோரும் இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பது பற்றி பாராளுமன்ற உறுப்பினரான சி.வி.குணரத்தினா பிரஸ்தாபித்தார். தென் மாகாண சபை முதல்வரான அமரசிறி தொடங்கொட தென்மாகாணத்தில் இதற்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டிருந்த அதே வேளை மேல் மாகாணத்தில் இப் பணி மாகாணசபை உறுப்பினரான பீலிக்ஸ் பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருந்த வேளையிலும் கூட திருமதி சந்திரிகாவோ ''எனது தாயாரான கட்சித் தலைவரும் கட்சியும் இது விடயத்தில் முடிவு எடுத்த பின்னர் தான் இது பற்றிச் சிந்திக்கமுடியும்'' என்று மிகுந்த தன்னடக்கத்துடன் கூறி வந்தார்.

தென் மாகாணசபை தேர்தல் வெற்றிக்கு எந்தத் தனிநபரும் பொறுப்பல்ல. தென்மாகாண மக்களுக்கு கிடைத்த வெற்றியே இது என்று பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டதன் மூலம் திருமதி சந்திரிகாவின் விசுவாசிகள் மேற்கொண்ட விஸ்வரூபமான முயற்சிகளுக்கு திருமதி சிறிமாவோ முதலில் ஆப்பு வைத்தார். அத்துடன் அவ் அறிக்கையில் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களான கிராமிய அமைப்பாளர்களின் அயராத கடும் முயற்சிக்கு பாராட்டு தெரிவித்ததன் மூலம் திருமதி சிறிமாவோ ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை விழுத்திக் கொண்டார்.

மேலும் ராவய பத்திரிகை திருமதி சந்திரிகாவை முன்னிலைப் படுத்துவது தொடர்பாக விசனமுற்றிருக்கும் திருமதி சிறிமாவோ இது தொடர்பாக சந்திரிகாவினதும் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், தமது நெருங்கிய உறவினருமான அநுருத்த ரத்வத்தையினதும் கவனத்திற்கு கொண்டுவந்தார். ராவய பத்திரிகையின் போக்கை கட்டுப்படுத்தும்படி திருமதி சிறிமாவோ விடுத்த கோரிக்கை பெரும் பயன் எதையும் விளைவித்ததாக இல்லை.

இந்த நிலையில் தான் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர மூலம் கையெழுத்து வேட்டைபற்றிக் கேள்வியுற்ற திருமதி சிறிமாவோ இந்தச் சவாலை எதிர்கொள்ளத் தயாரானார். சந்திரிகா குழுவினரின் இந்த நடவடிக்கை தொடர்பாக அநுரா தனக்கு முழுவிபரமும் தெரிவித்திருப்பதாகக் கூறிய சிறிமாவோ இதனை நிறுத்தும் முயற்சியில் அநுருத்த ரத்வத்தையை ஈடுபடுத்தினார். அத்துடன் மே 23 ம் திகதியன்று சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பற்றி ஏற்கனவே தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பாக கட்சிக்குள் எந்த அபிப்பிராய பேதமும் இல்லை என்றும் பத்திரிகை அறிக்கை மூலம் தெரிவித்தார். இன்னும் இதேநாளன்று நடந்த சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சுமார் 35 வருட அரசியல் அனுபவமும், ஆளுமையும் கொண்ட தான் ஏன் ஜனாதிபதி வேட்பாளராக முடியாது என்றும் கேள்வி எழுப்பினார். திருமதி சந்திரிகாவின் விசுவாசிகள் அநேகர் மத்திய குழுவில் இடம்பெற்றிருந்த போதும் கூட எவரும் திருமதி சிறிமாவோவை மறுத்து பேசும் துணிவைப் பெற்றிருக்கவில்லை.

இந்தநிலையை நன்குபுரிந்து கொண்ட அநுருத்த ரத்வத்தை திருமதி சிறிமாவோவை வழிவிட்டுக் கொடுக்கும்படி எவரால் கேட்க முடியும்? என்று கேள்வியை எழுப்பி திருமதி சந்திரிகாவின் விசுவாசிகளைக் கட்டுப்படுத்தி அவர்களை இசையச் செய்தார். மே 23ம் திகதி மத்திய குழுக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலிலே இடம் பெற்றிருக்காத ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய பிரச்சினை திருமதி சிறிமாவோவினால் எழுப்பப்பட்டு அவரது ஆசை துல்லியமாகத் வெளிப்பட்டதும் திருமதி சந்திரிகா மௌனமாகினார்.

இந்த சந்தர்ப்பத்தில் ''திருமதி சந்திரிகா தான் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியின்சார்பிலான வேட்பாளராக இருப்பார், திருமதி சிறிமாவோவிற்கு ஜனாதிபதியாகும் சந்தர்ப்பத்தை சந்திரிகா ஒரு போதும் வழங்க மாட்டார். இதற்காக நான் எந்தப் பந்தயமும் கட்டத் தயார்'' என்று அநுரா பண்டாரநாயக்கா கூறியிருப்பதும் நினைவு கூரத்தக்கதே.

## சந்திரிகாவின் ப்ளஸ் பாயின்ட்டுகள்

ஜனாதிபதித்தேர்தலில் எப்படியேனும் வெற்றியைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் குறியாகவுள்ள கட்சியின் சிரேட்ட உறுப்பினர்களும், புதிய இளம் தலைமுறையும் திருமதி சந்திரிகாவிடம்காணப்படும் மேலதிக தகைமைகளை முற்றுமுழுதாகப் பயன்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுவது வியப்புக்குரியதல்ல. திருமதி சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தின் சம்பவங்கள் பற்றி பதிலளிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து விலகுவதும் அவரது ஆட்சிக் காலத்தில் ஆயிரக்கணக்கில் ஜே. வி. பி. யினரை பலிகொண்டமைக்கான பழியை துடைத்துக் கொள்வதும், திருமதி சந்திரிகாவை வேட்பாளராக்குவதன் மூலத் சாத்தியமாகும் என்பது இத்தகையவர்களது ஒரு எதிர்பார்ப்பாகும்.

அத்துடன் கட்சிக்கு புத்துணர்ச்சி ஊட்டும் புதிய தலைமுறையின் பிரதிநிதியாக திருமதி சந்திரிகாவை இனங்காட்டுவதும் மதியூகமும், விவேகமும் மிக்கவராக அவரைச் சித்தரிப்பதும் இலகுவானது என்பதும் இவர்களது ஒரு கணிப்பீடாகும்.

மேலும் சிறுவயதில் தந்தையையும், இளம் வயதில் கணவனையும் அரசியல் காரணங்களுக்காக இழந்தவர் திருமதி சந்திரிகா என்பதால் அவர்பால் இயல்பாக இருக்கக் கூடிய அனுதாப அலையைக் கவர்ந்திழுப்பது சுலபம் என்றும்சுட்டிக்காட்டப்படுகிறது.

இன்னும் சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவர் பதவிக்கு உயர்த்தப்பட்ட போதும் கூட திருமதி சந்திரிகாவை சுதந்திரக்கட்சியினால் மட்டும் கட்டுப்படுத்த முடியாத வகையில் அவர் பொதுஜன ஐக்கிய முன்னணியிலேயே தங்கி இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் நீண்ட கியூக்களில் காத்திருந்த நிலை, அவசரகால சட்டத்தின் கீழ் நீண்டநாட்களுக்கு நாடு முழுமையையும் ஆட்சி செய்தமை, இன்னும் குறிப்பாக தேசிய இனப்பிரச்சினை கூர்மை பெறுவதற்கான தரப்படுத்தல் திட்டத்தை அமுல்படுத்தியமை உட்பட அது போன்ற அடக்குமுறை நடவடிக்கைகள் திருமதி சிறிமாவோ ஜனாதிபதி வேட்பாளராகும் போது பகிரங்கப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாது போகும். இவைகள் திருமதி சிறிமாவோவிற்கு மைனஸ் பாயிண்ட்டுகளாக மாறி எதிரணிகளின் வெற்றி வாய்ப்பையே பாதித்து விடக்கூடிய நிலையும் உண்டு. மேலும் ஐ.தே.கதரப்பில் டி.பி. விஜேதுங்காவைத் தவிர்த்துவேறு எவராவது ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரானால் சு.கட்சி தரப்பிலும் திருமதி சிறிமாவோ பொருத்தமானவராகக் கருதப்படமாட்டார். ஆக இவை அனைத்தும் திருமதி சந்திரிகா ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராகுவதற்குரிய சாதகமான சூழ்நிலையாகும் அத்தோடு சந்திரிகாவின் முயற்சியும் இணையும் பட்சத்தில் அநுரா பண்டாரநாயக்காவின் கூற்று மெய்யாகிப் போவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.


கொழும்பு ஸ்ருடியோ

தொழில் நுட்பத்தில்
35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
தரமான

- ★ Line, Half tone and Colour Blocks
- ★ றபர் சில் Rubber Stamps
- ★ சில்க் ஸ்கிறின் Silk Screen
- ★ Re-copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க.

கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி, (சி-9571) யாழ்ப்பாணம்.


## திருத்தம்

07 - 06 - 94 அன்றைய ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரமாகிய யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் விளம்பரப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடத்திற்கு தகைமைகளாகக.பொ.த.(உ/த) வர்த்தகப் பிரிவில் சித்தியுடன்அல்லதுதட்டெழுத்துத்துறையில் அனுபவம்பெற்றமைக்கான சான்றிதழைக்கொண்டிருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதை க. பொ. த. (உ/த) வர்த்தகப்பிரிவில் சித்தியுடன் தட்டெழுத்துத்துறையில் அனுபவம் பெற்றமைக்கான சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும் என திருத்தம் செய்யப்படவேண்டும்.

**பொது முகாமையாளர்**
யாழ்ப்பாணம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி

75/1,பலாலி வீதி,
கந்தர் மடம்
யாழ்ப்பாணம்,

(சி-9628)

# சிறுகதை

# பங்களிப்பு

அந்த அகால வேளையிலும், யாழ் போதனா வைத்தியசாலை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் சேவையின் சின்னமாக விளங்கிக்கொண்டிருக்கும் அந்த வைத்தியசாலையில் பொறுப்புணர்ச்சி மிக்க டாக்டர்களும், கடமையேகண்ணாகக் கருதும் மருத்துவத் தாதியரும், ஊழியர்களும், இன்னும் இயல்பான இனப்பற்றுதலால் உந்தப்பட்டு நேசக்கரம் கொண்டு நோயாளர்களை அணைத்து ஆறுதலளிக்கும் நலன்விரும்பிகளுமென அனைவரதுசெயல்பாடுகளும் துரிதகதியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நுழைவாயிலில் அடிக்கடி வாகனங்கள் வந்து நிற்பதும் காயமடைந்தவர்கள் உடனுக்குடன் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுவதுமாய் அந்தப் பிரவேசப் பகுதி அமளிதுமளிப் பட்டது அங்கு கடமையாற்றுபவர்களது முகங்கள் இறுகிக் கிடப்பதை அவதானிக்கமுடிந்தது. பொறுப்புணர்ச்சி, புரிந்துணர்வு என்ற அடிப்படையைக் கொண்டு அங்கு எல்லோரது செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

ஆபரேசன் தியேட்டர் அமைதியாக, ஆனால் சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருந்தது. அங்கே அறுவைச் சிகிச்சை நிபுணராக அண்மையில் லண்டனிலிருந்து திரும்பியிருந்த டாக்டர் ராகவனது தலைமையின் கீழ் சிகிச்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. காயமடைந்தவர்களது உறுப்புகளில் ஊடுருவிக் கிடந்தசன்னங்கள் ஷெல் துண்டுகள் முதலியவற்றை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி இளைபோட்டுவார்ட்டுகளுக்கு அனுப்பிவைத்தனர்

பிரத்தியேகமான சில கேஸ்களை ராகவனே கையாண்டான். தலையில் பலத்த காயத்துடன்ஒருவரை அவசரமாக ஸ்ரெச்சரில்வைத்துத் தள்ளிக்கொண்டு வந்தனர். அந்த நோயாளியினது மண்டையின் பிற்பகுதி சேதமடைந்திருந்தது. ராகவன் முழுநம்பிக்கையுடன் அந்த நோயாளியைக் காப்பாற்ற முயற்சித்தான். அவனது ஈககள் ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் இயங்கியபின்னர், உதவி டாக்டர்கள் அந்தக் காயமடைந்தவரின் மண்டையைச் சுற்றி கட்டுப்போட்டனர். I C. U எனும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அந்த நோயாளி அனுப்பிவைக்கப்பட்டான்.

நோயாளரின்வருகை ஸ்தம்பித்துவிட்டதனால் டாக்டர் ராகவன் ஆபரேசன் தியேட்டரை விட்டு வெளியேறி அவசரமாகத் தீவிர சிகிச்சைப் பிரிவை நோக்கி நடந்தான். வார்ட்டினுள் நுழைந்தவன் ஒரு கணம் தனது பார்வையை வார்ட் முழுவதிலும் சுழல விட்டான்

அங்கே ... டாக்டர் சுகந்தி மண்டையில் கட்டுப்போட்டிருந்த அந்தநோயாளியின் இரத்தஅழுத்தத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தாள். இரவு முழுவதும் நித்திரைவிழித்திருந்ததால் அவளது விழிகள் சிவந்து கிடந்தன ராகவன் அவளருகே சென்றதும் அவள் இருக்கையை விட்டு எழுந்து கொண்டாள் ஒவ்வொரு நோயாளியினதுவிபரங்களை விபரித்துக் கொண்டே அவனுக்கு வார்ட் முழுவதையும் சுற்றிக் காண்பித்தாள். எல்லாக் கேஸ்களையும் பார்த்து முடித்ததும் ராகவன் அவளிடம்

''சுகந்தி! நான் குவாட்டஸ்க்குப் போய் கொஞ்ச நேரம் றெஸ்ட் எடுக்கலாமென்று யோசிக்கிறன்''

''அதுக்கென்ன, போய் றெஸ்ட் எடுங்கோ நான் டியூட்டி முடிய வாறன்''

சொன்னவள் ராகவன் நடந்து போவதையே கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது மனத்தில் தோன்றிய பெருமிதம் பார்வையினூடாக வெளிப்பட்டது. அவளுக்கு அந்த நேரத்திலும் தான் வாசித்த 'மாக்ஸீம கோர்க்கி' யின் சில வரிகள் ஞாபகத்தில் வந்தன.

'நமது உரிமைகளுக்காகப் போராடும்போது மக்கள் ஒன்று திரண்டு ஒருவரோடொருவர் பிணைந்து நின்று நாமெல்லாம் உரிமையை இழந்தவர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி நமது உரிமைகளைப் போராடிப் பெறமுடியாது'

எவ்வளவு உண்மை பொதிந்த வார்த்தைகள் என எண்ணியவள், வார்ட்டினுள் தனது பார்வையைத் திருப்பி நோட்டமிட்டாள் எல்லா நோயாளிகளும் சலனமின்றி இருப்பதாக அவளது உணர்வுக்குத் தோன்றியது. அவளது கால்கள் தனது பிரத்தியேக அறையை நோக்கி நடந்தன.

சற்று ஓய்வாகக் கதிரையில் அமர்ந்து கொண்டவளின் நினைவலைகள் பின் நோக்கிப் பாயத்தொடங்கின.

சுகந்தி அப்போது ஏ.எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவளது அத்தான் டாக்டர் ராகவன் 'ஸ்காலர்சிப் மூலம் மேற்படிப்பை மேற்கொள்ள லண்டனுக்குப் புறப்பட்ட வேளையது சுகந்தி மாமா வீட்டிற்கு போயிருந்தாள் மாமா, ராகவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியவாறே அவளைக் கேலி செய்தார்.

''சுகந்தி ஒரே முறையில் மெடிசினுக்கு என்ர பண்ணிப்போடு சோதினையில கோட்டை விட்டியோ பிறகு கொத்தானையும் கோட்டை விட்டிடுவாய்''

இப்போதும் அந்த வார்த்தைகள் அவளது காதில் ஒலிப்பது போலிருக்கின்றது. மாமாவின் வேண்டுகோளைச் சுகந்தி நிறைவேற்றி விட்டாள் அல்லும், பகலும் முழுமூச்சுடன் முயன்று தன் பெயருக்குப் பின்னால் எம். பி. பி எஸ். என்ற பட்டத்தைச் சேர்த்துக்கொண்டாள். சுகந்தி யாழ் போதனா வைத்தியசாலையில் டாக்டராகக் கடமையேற்றபோது, ராகவனும் தன் பெயருடன் பல பட்டங்களைச் சுமந்து கொண்டு தாயகம் திரும்பினான்.

ராகவனுக்கு வரும் வழியில் பிரயாணத்தினால் ஏற்பட்ட கஷ்டங்கள் வெறுப்பைத் தந்தது லண்டனிலிருந்து புறப்பட்டு பன்னிரண்டு மணி நேரத்திற்குள் கொழும்பிற்கு வந்து இறங்கியவனுக்கு, யாழ்ப்பாணம் வந்து சேரச் சில நாட்கள் சென்றன. அதுவும் கரிய இருட்பொழுதினில் கிளாலிக் கடலைக் கடந்த அனுபவம் அவனுக்கு வாழ்க்கையையே வெறுக்க வைத்தது. ஒரு கணம், தான் இங்கிருந்து புறப்பட்டபோது 'லக்ஸறி' பஸ்ஸில் சொகுசாக அமர்ந்து ஏதோ சினிமாப் படமொன்றைப் பார்த்தவாறு குஷியாகப் பயணித்த சம்பவத்தை நினைத்துக் கொண்டான். எவ்வளவு மாற்றங்கள் இந்த மண்ணில் ஏற்பட்டிருக்கின்றன மண்ணெண்ணெய் புகையைக் கக்கிக் கொண்டு திரியும் வாகனங்களைப் பார்க்க அவனுக்கு வயிற்றைக் குமட்டியது. அத்துடன் மின்சாரம் இல்லாமல் குப்பி விளக்குகளுடன் இருளில் வாழும் மக்களைப் பார்க்க அவனுக்கு மேலும் வெறுப்பை ஊட்டியது. கடந்தபல ஆண்டுகளில் எந்த ஒருவேலையையும் மின்சாரம் மூலமே செய்து பழக்கப்பட்டுவிட்டவனுக்கு இவை சலிப்பைக் கொடுத்தது வியப்பில்லைத்தான்.

ராகவன், சுகந்தியைத் திருமணம் செய்து கொண்டு லண்டனுக்குத் திரும்பிவிடுவதெனத் தீர்மானித்தான். இருவரதுபெற்றோர்களும் திருமண ஆயத்தங்களைச் செய்வதில் ஆரவாரத்துடன் ஈடுபட்டனர்.

சுகந்தியைச் சந்தித்த ராகவன் தனது தீர்மானத்தைவெளியிட்டான் அதிர்ந்து போனாள் சுகந்தி. அவள் இதைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்த மண்ணை விட்டு அந்நியப்பட்டுப்போவதென்பது அவளால் முடியாத காரியமென்பதை அவள் ராகவனுக்குச் சற்றுத் தயக்கத்துடன் வெளியிட்டாள். அவளை அன்றாடம் சந்திக்கும் நோயாளரின் முகங்கள் அவளெதிரே தோன்றி நியாயம் கேட்பதை உணர்ந்தாள். 'எங்கள் இனத்தவரை இங்கே நிர்க்கதியாய் விட்டுவிட்டு அந்நியருக்குச் சேவை செய்யப்போகிறாயா?'

முடியவில்லை. அவளால் அதை சிந்திக்க முடியவில்லை. ஒரே பிடியாகத் தான் ஊரை விட்டு வரமுடியாது என மறுத்து விட்டாள்.

ராகவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் ''சுகந்தி வசதிகளையும், வாய்ப்புக்களையும் உதறிவிட்டு இங்கை இருந்து நீர் என்ன சுகத்தைக் காணப்போகிறீர்?''

''அத்தான்! இங்கை ஆகக் குறைந்த வசதியோடை இருந்தாலும் கூட எங்கடை சனங்களுக்கு, எங்கடை மண்ணுக்காக என்று சேவை செய்யிறபோது என்ரைமனம்குளிர்ந்து போகுது. அதிலைகிடைக்கிற நிம்மதிபோதும்எனக்கு. தயவு செய்து நீங்கள் என்னை மறந்திடுங்கோ''

ஒரே முடிவாகச் சொல்லி விட்டாள் சுகந்தி. ராகவனால் அவ்வளவு எளிதில் சுகந்தியை மறந்துவிட முடியவில்லை. அவளை மட்டுமல்ல அவளது ஆணித்தரமான வார்த்தைகளையும்தான்

ராகவன் இப்போது சிந்திக்கத் தொடங்கினான். சுகந்தியின் பிடிவாதத்தில் நியாயமிருப்பதை முதன்முதலாக அவனது உணர்வுகள் சீரணிக்கத் தொடங்கின. நீண்ட சிந்தனையின் பின் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். தாயகத்திலேயே தங்கித் தனது பணியைத் தொடருவதென உறுதியெடுத்துக் கொண்டான்.

''டொக்டர்! எட்டாம் நம்பர்பெட்டில இருக்கிற பேஷண்டுக்குபிற்ஸ் மாதிரிக்கிடக்கு ஒருக்கா வந்து பாருங்கோ''

நர்ஸின் குரல் அவளது சிந்தனைத் தொடரை அறுத்து கடமைக்குஅழைப்புவிடுத்தது. சுகந்தி அவசரமாக எழுந்து போனாள். அந்த நோயாளியின் குணம் குறிகளைச் சிறிது நேரம் அவதானித்தவள் நாடியோட்டத்தைப் பரிசோதித்த பின் நர்ஸிடம் ஏதோ ஊசி மருந்தைக் கொண்டுவரும்படி ஏவினாள் நர்ஸ்கொண்டுவந்து கொடுத்த மருந்தை நாளத்தின் மூலம் அந்த நோயாளியின் உடலில் செலுத்தினாள் சிறிது நேரத்தில் வலி புத்தணிந்து நோயாளி உறக்கத்தில் ஆழ்ந்து போனான். மீண்டுமொருமுறை நாடித்துடிப்பை பரிசோதித்து விட்டுச் சுகந்திதன் இருக்கைக்குத் திரும்பினாள்.

## மலரன்னை

இப்படியாக அந்த வைத்தியசாலையில் உயிர் காக்கும் பணி ஓய்வு ஒழிச்சலின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அன்றைய கடமை முடித்துப் புறப்பட்ட சுகந்தியை இரத்த வங்கியில் கடமையாற்றும் அவளது சக தோழி டாக்டர் உமா சந்தித்தாள்

'சுகந்தி! உம்முடைய அத்தான், டொக்டர் ராகவன் இன்றைக்கு வந்து பிளட் டொனேற் பண்ணினவர்''

''உண்மையாகவே சொல்லுறீர் உமா!

அவளது கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன மறுகணம் அவளது கண்களில் நீர்த்துளிகள் தோன்றிப் பளபளத்தன உமாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை கண்களைத் துடைத்துக் கொண்டே சுகந்தி சொன்னாள்.

''உமா! நான் சரியாய் உணர்ச்சி வசப்பட்டுப் போனன்.

' உமா: நான்சரியாய் உணர்ச்சிவசப்பட்டுப் போனேன். அத்தான் லண்டனில இருந்து வந்த நாட்களில அவருக்கு உங்கள் மண்ணின் பற்றிய நிலைமை விளக்கமில்லாமல் இருந்தது. ஆனால்...... இப்ப அவர் முற்றாக மாறிப் போயிட்டார், என்று நினைக்க எனக்குச் சந்தோஷத்தில கண்ணீரே வந்திட்டுது.''

''சுகந்தி! நான் பயந்து போனேன், நீர் அழுகிறீராக்கும் என்று நினைச்சிட்டன்''

பேசிக் கொண்டே தோழிகள் இருவரும் தங்கள் தங்ககங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்

அன்று பகல் முழுவதும் ராகவனைச் சந்திக்க முடியவில்லை. அவசர ஆபரேசன் கேஸ்கள் நிறைய இருந்ததால், அவற்றை முடித்துக் கொண்டு வரச் சுணங்கிவிட்டது. அவனைக் கண்டதும் சுகந்தி,

''அத்தான்! நீங்கள் பிளட் டொனேற் பண்ணினதாய்க் கேள்விப்பட்டனான். உண்மைதானே?''

''ஓம் சுகந்தி எங்கடை மண்ணுக்காகச் சிந்தப்படுகிற இரத்தத்தை ஈடு செய்ய வேண்டியது இந்த மண்ணில வாழுற எங்கடை கடமை தானே''

''அத்தான்! உங்களுக்கு உடம்பு 'வீக்' காய்த் தெரியேல்லையே.''

''இல்லை சுகந்தி. இண்டைக்குத்தான் நான் நல்ல உற்சாகமாய் நின்று கேஸ்களைக் கவனிச்சிருக்கிறன். என்ரை மனத்தில ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கு நானும் என்னாலான பங்களிப்பைச் செய்து போட்டன் என்று.''

''ஏன் நீங்கள் செய்யிற பணியே ஒரு பங்களிப்புத் தானே. அதை மறந்திட்டீங்களே?''

தனக்கு ஏற்பட்டிருக்கும் மனநிறைவுக்கு மூல காரணமாய் விளங்கிய சுகந்தியை அவனது மனம் மானசீகமாக வாழ்த்தியது.

மறுநாள் நகரமே விழாக் கோலம பூண்டது. தெருக்களெல்லாம் சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ராகவனது சைக்கிள் அந்தத் தெருவினால போய்க்கொண்டிருந்தது. அவனது நெஞ்சில் இணைந்தவாறு பாரில் சுகந்தி அமர்ந்திருந்தாள். லண்டன் மாநகர வீதிகளில் மிதந்து திரியும் கப்பல் போன்ற கார்களை ஒரு கணம் ராகவன் நினைவில் மீட்டுக் கொண்டான். அதைவிட எங்கள் தெருக்களில் பவனி வரும் சைக்கிள்களில் திரிவதில் ஒரு வித உற்சாகமும் மனநிறைவும் ஏற்படுவதை அவனால் நன்கு உணர முடிந்தது. வெற்றி விழாவில் பங்கேற்பதற்காகத் தம்மை மறந்த நிலையில் போய்க் கொண்டிருந்தனர். அந்தந் தம்பதிகள்

(யாவும் கற்பனை)

□ □ □

---

சந்திரா தனபாலசிங்கத்தின்

# "சில மனிதர்கள்"

## ஒரு நோக்கு !

விடுதலைக்கான போராட்டம் இந்த மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இலக்கியப் படைப்புகளின் தேவை அதிகமுள்ளது.

இந்த தேசத்தின் எதிர்கால சந்ததிக்கு வரலாற்றைச் சொல்லவேண்டிய தேவை இலக்கியப் படைப்பாளிகள் அனைவருக்கும் உண்டு.

இந்த மண்ணில் இளம் எழுத்தாளர்கள் சமகாலத்தோடு பொருந்தக்கூடிய இலக்கியங்களைப் படைத்து வருகிறார்கள். இது நல்ல ஆரோக்கியமான அறிகுறி யுத்தம் நடந்து கொண்டிருக்கும் தேசத்தில்அனைத்துதரப்பினரின் சப்தமும் கேட்க வேண்டும்.

சந்திரா தனபாலசிங்கம் என்ற பெண் அறிமுக எழுத்தாளர் 'சில மனிதர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலை சமீபத்தில் வெளியிட்டுள்ளார்.

அழகான வடிவத்தில் வெளிவந்துள்ள இந்த நூலில் பதினொரு சிறுகதைகள் உள்ளன.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு வெளிவந்துள்ள இந்தப் புத்தகத்தில் பெண்கள் சம்பந்தமான ஆழமான படைப்புகள் எவையும் இடம்பெறவில்லை என்று சொல்லலாம்.

முன் கதையிலிருந்து இறுதிக்கதை வரை வாசித்து முடித்து யோசித்துப் பார்த்தபோது அருமையாக ஒரு சில கதைகள் தவிர மற்றையது ஏதும் மனசுக்குள் ஒரு கலாபூர்வமான அலையை எழ வைத்ததாகக் கூறுவதற்கில்லை.

'மனங்கொத்தி மனிதர்கள்' என்றகதையில் அந்த 'இந்து' என்ற பெண் சமுதாயத்தின் 'வெப்பப்' பார்வைக்கு முகம் கொடுக்கும் விதம் இருதயத்தை மெலிதாக நெருட வைக்கின்றது. ஆனால் அவளின் மௌனத்திற்கு பெரிதாக அர்த்தம் இருப்பதாகவோ அல்லது அதில் ஒரு செய்தி இருப்பதாகவோ சொல்வதற்கில்லை.

'தண்டனை' என்ற கதை பூதாகரமாகியுள்ள நிகழ்வுதான். ஆனால் நூலாசிரியர் இதற்கான தீர்வாக எதைச் சொல்ல முயற்சித்திருக்கின்றார் என்பது தெளிவில்லை

'எதற்காக?' என்ற கதையில் ஆசிரியர் மூன்று சிக்கல்களை முன்வைக்கின்றார். வசதியற்ற வைத்தியசாலை, மதிய உணவு வழங்கும் பாடசாலை, இந்திய இராணுவத்தின் ஊரடங்குச் சட்டம் ஆகி

(11ஆம் பக்கம் பார்க்க)

# பொலிகை மண் பெற்றெடுத்த மாவீரர்கள் நினைவாக

ஒற்றுமை வி. கழகம் நடாத்தும்

# விளையாட்டுப் போட்டியும் கலை விழாவும்

## காலம்: 10 - 06 - 94

இல்ல விளையாட்டுப் போட்டியுடன் பார்வையாளருக்கான குத்துச்சண்டை, மல்யுத்தம் உட்பட சகல விளையாட்டுக்களும்

## கழக மைதானத்தில் ஆரம்பமாகும்

திரு. நடராசா சோதிசிவம்
அவர்களின் மாணவர்களினதும் அவரது அன்பிற்குரிய
மாணவரான தமிழாராய்ச்சி மாநாட்டு புகழ்
பொலிகை தில்லை - சிவலிங்கத்தின்
மாணவர்களினதும் சிலம்ப விளையாட்டுக்கள் நடைபெறும்.





## வீர தீர சாகச விளையாட்டுக்கள்

**10-06-94 மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்**

பருத்தி நகர் தந்த பெருந்திறல் சான்றோன்
**திரு. M. துரைரத்தினம்**
அவர்களும் அவரின் மாணவனாகிய பொலிகையூர் தந்த
**திரு. சாண்டோ S. செல்வராஜா**
இவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட எமது கழக வீர-வீராங்கனைகளின்
மயிர்க்கூச்செறியும் வீர தீர சாகச விளையாட்டுக்கள் வரிசையில்

**தமிழீழத்தில் முதன் முதலாக பெண் வீராங்கனைகளாக**



செல்வி தங்கவேலாயுதம் ஜமுனா
அதிபாரம் கொண்ட உழவுயந்திரத்தையும்



செல்வி அமிர்தநாதர் மாலா
அதிபாரம் கொண்ட E.L.F. வாகனத்தையும்

தமக்கு மேலால் ஏற்றுவார்கள்



★ தங்கவேலாயுதம் தங்கேஸ்வரராசா
அதிபாரம் கொண்ட இரண்டு இ சு சு லொறிகளையும்

★ செல்ல மாணிக்கம் ரஞ்சகுமார்
அதிபாரம் கொண்ட இரண்டு உழவுயந்திரத்தை ஆட்களை ஏற்றி ஒன்றன் பின் ஒன்றாக(தொடராக) மார்பின் மேல் ஏற்றுவார்கள்

★ கணேசமூர்த்நி கவீந்திரன்
தமது தலை முடியினால் வாகனம் ஒன்றை கட்டி இழுப்பார் (காலை 7 மணி)

★ சிவலிங்கம் பிறேர்சிங்
தமது தலை முடியினால் ஓடும் மோட்டார் சைக்கிளை இழுத்து நிறுத்துதல்

★ தங்கவேலாயுதம் பரமானந்தம்
இரண்டு உழவு இயந்திரத்தை மார்பின் மேல் ஏற்றுதல்

★ குணபாலசிங்கம் சுரேஷ்குமார், மருதநாயகம் பாலு
இருவரும் மார்பின் மேல் பாரம் கொண்ட பாறாங்கற்களை வைத்து சம்மட்டியால் அடித்து உடைப்பார்கள்

★ பிலோமிநாதர் எட்வேட்
நெருப்பு புதைகுழியினுள் பலமணி நேரம்

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(8425)

## பொலிகண்டி ஒற்றுமை வி. கழகம்

# போரை நிறுத்தி அரசியல் தீர்வுகாண சிறிலங்கா அரசிடம் கோரிக்கை

## சர்வதேச ஆசிரியர் சம்மேளனம் விடுத்தது

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வு காண்க என இலங்கை அரசை கோரும் தீர்மானம் ஒன்று சர்வதேச ஆசிரிய சம்மேளனத்தின் ஆசிய பிராந்திய மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

மே 29 தொடக்கம் ஜூன் முதலாம் திகதி வரை தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள நாராய் கொற்றலில் சம்மேளனத்தின் ஆசியபசுபிக்பிராந்தியமாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள ஆசிரிய சங்கங்களின் 600க்குமேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் இலங்கையின் சார்பில் ஐந்து தொழிற் சங்கங்கள் கலந்துகொண்டன. இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் போரினால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதகமான பாதிப்புக்கள் தொடர்பாகவும், போர்ச் செலவினங்கள் வாழ்க்கைச் செலவை பலமடங்கு உயர்த்திவிட்டுள்ளதாகவும், மனித அடிப்படை உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து ஒரு நீண்ட அறிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் இலங்கையில் புரையோடிப் போயிருக்கும் சிறுபான்மையினரான தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமுகமாக நான்கு வருட காலமாக நீண்டு கொண்டிருக்கும் போரைக் நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அரசியல் தீர்வுகாண வேண்டுமென சமர்ப்பித்த பிரேரணையை சிறிலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் தலைவர் திரு. எம். பி. மென்டிஸ் வழிமொழிந்தார்.

இப்பிரேரணையை ஆராய்ந்த சர்வதேச சம்மேளனத்தின் ஆசிய பிராந்திய மகாநாடு இப்பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக் கொள்வதாக தீர்மானித்துள்ளது என மகாநாட்டில் கலந்துகொண்டு திரும்பிய தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுக் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

மேலும் சம்மேளனத்தில் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானம் விரைவில் உத்தியோக ரீதியாக சிறிலங்கா அரசிற்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு தோளோடு தோள் நின்று ஒத்துழைத்த இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கத்திற்கும் ஏனைய ஆசிரிய தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இந்த ஆசிரிய சங்கம் நன்றி தெரிவிப்பதாகவும், இதற்கு பூரண ஆதரவு நல்குவதில் அவுஸ்ரேலியா, கொரியா, பிஜி, ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேப்பாளம், பிலிப்பீன்ஸ், நியூசிலாந்து நாடுகளில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தீவிர அக்கறையுடன் தொழிற்பட்டார்கள் எனவும் அவர்களுக்கும் இ. த. ஆ. சங்கம் நன்றி தெரிவித்துள்ளதாகவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

---

**கம்போடியா** அணியினர் ஆட்சியிலிருந்த போது சிலகாலம் அரச தலைவராக பெயரளவில் செயற்பட்டவர் என்றாலும் மனிதாபிமான முகம் காட்டும் மேற்குலகம் பொல்பொட் அணியினர் மேலாதிக்கம் பெறுவதை விரும்பாது கம்போடிய அரசுக்கு முண்டு கொடுக்க முற்படும்போது மீண்டும் கம்போடிய சிக்கல் வேறொரு வடிவம் எடுத்து மக்களை அழிவின் விளிம்பிற்கு தள்ளிவிடும். பிறர்தலையீடு என்பதே அன்றாட நியதியாகி விட்ட வளமான பூமியின் மைந்தர் படும் அவலத்திற்கு இன்று யார் பொறுப்பு என்பது என்றுமே விளங்காத சங்கதியாகி விட்டது.

---

**பாதாள உலக**வில் தாமே போய் விழுந்ததற்கு ஒப்பானதாக இருக்கின்றது என்பது மிகையல்ல.

எனவே எதிர்வரும் தேர்தல்கள் என்பது இதுவரை நடைபெற்ற சம்பவங்களின் ஒரு கூட்டு ஐந்தொகையாவே இருக்கும் என்றும் எதிர்டார்க்கப்படுகிறது. கட்சியிலுள்ள உட்பூசல்களைசரி செய்வதா? பாதாளஉலகக்கிரிமினல்களை திருப்திப்படுத்துவதா? பூசி மெழுகுதல்கள் மூலம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையை போக்குவதா? என்ற சிக்கலான கேள்விகளில் ஐ. தே. க சிக்கியுள்ளதுமட்டும் இப்போதைக்கு வெளிப்படையானது.

---

**"சில மனிதர்கள்"** யதான் அவை. இவற்றில் எழுத்தாளர் தன் அழுத்தமான பார்வையை எதிலும் பதிக்கவில்லை.

சமூகத்தின் குறைகளை சுட்டும் எழுத்தாளர் 'பத்திரிகைச் செய்தி' வடிவில் கதையை நகர்த்துகின்றர். அது சிறுகதைப் போக்கிற்கு முரணானதாகஉள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதேமாதிரியே அன்பு செய்க' என்கின்ற கதையும், 'சில மனிதர்கள்' என்ற கதையில் பாத்திரங்களுடன் ஒன்றிப் போகாமல் கதை சொல்லப்பட்டிருக்கின்றது.

ஏனைய கதைகளிலும் இக்குறைபாடுகளை பெரிதாகக் காணக் கூடியதாக இருப்பினும், இந்த அறிமுக எழுத்தாளர் சிறந்த படைப்புகளை தரவல்லவர் என்ற நம்பிக்கை ஒவ்வொரு கதையிலும் வெளிப்படுகின்றது.

எமது தேசத்தின் செய்தி பெரிதாகச் சொல்லப்படாவிட்டாலும் கூட சில கதைகளில் எழுத்தாளர் சில அவலங்களைச் சொல்ல முயற்சித்திருக்கின்றார்.

இந்த மண்ணின் நிகழ்வுகளை ஆவணப்படுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வு சந்திரா தனபாலசிங்கத்திடமும் உள்ளது என்றுகூறலாம்.

**வவுனியா - திலீபன்**

---

**பரவும்**ப்படுவோர் வெளியிடங்களுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளவேண்டுமெனவும் இந்நோயின் குணங்குறிகளை பார்க்கும்போது இது பக்ரீரியாவினால் பரவுகின்றது என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். ஆகவே தகுந்த சிகிச்சை பெறுமாறு மக்களை அவர் கேட்டுள்ளார்.

---

**இரண்டாம்**மை, ஜானதிபதி ப்ரேமதாசா கொல்லப்பட்டமை யாவும் அடங்குகின்றன.

இந்த வகையில் கடந்த நான்கு ஆண்டுகளிலும் இலங்கையின் அரசியல், இராணுவ வரலாற்றில் பல முக்கிய பதிவுகளைக் கொண்டவையாகும். சிறிலங்காவைப் பொறுத்து பல தோல்விகளுக்கும் இழப்புக்கும் காரணமாகிய இப் போராண்டுகள் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதைத் தெளிவாகவே புலப்படுத்தியுள்ளன. விடுதலைப் புலிகள் இக்காலப் பகுதியில் ஈட்டிய வெற்றிகள் தமிழர் தேசிய இனத்தின் போராட்ட வரலாற்றில் பெரும் முன்னேற்றப்படிகளாகும்.

அத்தோடு இந் நான்காண்டு காலம் ஒரு பெரும் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததோடு தமிழீழ அரசு ஒன்று உருவாவதற்கான கட்டுமானப்பணிகளாக காவற்துறை, நீதித்துறை, வைப்பகம் போன்றவற்றை ஆரம்பித்துள்ளமை தமிழீழ மக்கள் ஒரு தமது அரசை நிறுவுவதற்கான வழியில் கணிசமாக முன்னேறிச் சென்றுள்ளனர் என்றே கூற முடியும்.

---

## மிதிவெடியில் பசு பலி

(வடமராட்சி)

மிதிவெடியில் சிக்கி கால்நடை ஒன்று பலியானது. பருத்தித்துறை கொட்டடியில் மேய்ச்சலில் நின்ற பசு மாடு மிதிவெடியில் மிதித்ததையடுத்து கால் துண்டிக்கப்பட்ட நிலையில் ஸ்தலத்தில் இறந்தது. (யோ)

## ஜனசவிய நிதி ஒதுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முடிவுறாத ''ஜனசவிய'' திட்டத்திற்கான நிதி சிறிலங்கா அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை தற்சமயம் கொழும்பில்தங்கியுள்ள யாழ். அரச அதிபர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

எனவே யாழ். மாவட்டத்தில் முடிவுறாத ஜனசவிய திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதாகதெரிவிக்கப்பட்டது. (பா), (தி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-06-10**
**வெள்ளி இரவு**

08.01 — இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்ப நினைவாகச் சிறப்பு நிகழ்ச்சி ''சிறிலங்கா- புலிகள் போர்''
08.20 -- சிறப்பு நிகழ்ச்சி ''மட்டக்களப்பு சிறையுடைப்பு''
08.30 — செய்திகள்
08.40 — அரசியல்அரங்கம் ''அல்லல் பட்டு தமிழ் மக்கள் அழுத கண்ணீர் சிங்களத்தின்செல்வத்தைத் தேய்க்கும் படை''
08.50 — வாத்திய கானங்கள்

**1994-06-11**
**சனி காலை**

07.02 — மாவீரவணக்கம்
07.15 — நீங்கள் கேட்டவை
07.30 — செய்திகள்
07.35 — பத்திரிகைச்செய்திகள்
07.40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

---

## சுவிடிஸ் அரசாங்கம் மருந்து அன்பளிப்பு

சுவிடிஸ் தூதரக பொறுப்பதிகாரி 24 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் மருத்துவ உபகரணங்களையும் நேற்றுக்காலை சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் யாழ் மாவட்ட அரச அதிபர் கா. மாணிக்கவாசகரிடம் கையளித்துள்ளார்.

அத்தியாவசிய மருந்துகள் விற்றமின்கள், இரும்புச் சத்து வில்லைகள், பூச்சி மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் இவ் அவசர மருத்துவ உதவித் தொகுதியில் அடங்கியுள்ளன.

சுவிடிஸ் அரசாங்கம் வழங்கிய நிதியைக் கொண்டு கொழும்பில் உள்ள யுனிசெப் அலுவலகம் இவற்றை விநியோகித்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மகப்பேற்று மற்றும் சிறுவர் சிகிச்சை நிலையங்களுக்கு இவ் அன்பளிப்புக்கள் வழங்கப்படும். (பா)

## 'கோமாரி' கப்பலில் இலவச சீருடைத் துணி

(யாழ்ப்பாணம)

யாழ் மாவட்டபாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடைத் துணிகள் அடுத்து பருத்தித்துறை வருகின்ற 'கோமாரி' கப்பல் எடுத்து வர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ், அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடைத் துணி வழங்கல் இம் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

எனவே யாழ். மாவட்டத்திலும் இம் மாதம் 27ஆம் திகதிக்கு முன்பாக சீருடைத் துணிகள் வந்து சேர்ந்தால் இங்கும் அதே தினத்தில் மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா) (தி)

## விதை உருளைக்கிழங்கு பெற விண்ணப்பிக்கவும்

1994-95 கால போகத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட இருக்கும் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை பசுமை விவசாய நிலையங்கள், வட்டத் தொடர்பாளர் அலுவலகங்கள் விவசாய போதனாசிரியர், விவசாய சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 21-06-94 பிற்பகல் 4.30 மணிக்கு விண்ணப்பங்களை விண்ணப்பதாரி நேரடியாக தங்கள் பகுதி பசுமை சேவை நிலையங்களில் ஒப்படைக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கின்றது.

## பரீட்சை நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான யாழ். பரீட்சை நிலையமொன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த இரண்டு பரீட்சை மண்டபங்கள் யாழ். மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே பரீட்சார்த்திகள் மேற்படி பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (பா)

## கூட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 2-ல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று பி.ப. 2.00 மணிக்கு யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

## மெய்வல்லுநர் போட்டி

ஊர்காவற்றுறை-வேலணை பிரதேச செயலகங்களினால் இணைந்து நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் இடம் பெறும்.

## யாழ். மாவட்டத்திற்கு 1000 பீப்பா தார்

கொழும்பில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு 1000 பரல் தாரை எடுத்துவர யாழ். அரச அதிபர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்கான அனுமதியை கொழும்பில் சகல தரப்பினரிடம் இருந்தும் அவர் பெற்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான வீதிகள் குண்டுகள், குழியுமாக காட்சியளிக்கின்றன, எனவே எடுத்துவரப்படவுள்ளதாரைக் கொண்டு இவற்றை சரிசெய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் யாழ். மாநகர சபையும் தனது எல்லைக்குட்பட்ட வீதிகளை சரிசெய்து வருகின்றது. (பா, தி)

## இந்திய அகதி முகாம்களில் 75000குழந்தைகள்பிறந்தன

(கொழும்பு)

தமிழ் நாட்டிற்கு அகதிகளாக சென்ற ஈழத்தமிழ் அகதிகளுக்கு எழுபத்தையாயிரம் குழந்தைகள் பிறந்துள்ளதாக சிறிலங்கா மொனிற்றர் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பிறந்த மேற்படி குழந்தைகளுள் பத்தாயிரம் குழந்தைகள் பெற்றோருடன் நாடுதிரும்பியுள்ளனர். இதுவரை 40 ஆயிரம் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதேவேளை இன்னும் 70 ஆயிரம் பேர் அங்கு அகதி முகாமில் உள்ளதாகவும் முகாம்களிலும் வெளியிலும் 1 இலட்சத்து 80 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக தங்கியுள்ளதாக அச் சஞ்சிகை மேலும் தெரிவிக்கின்றது.

# 8000 பீப்பா மண்ணெய் மாகோவில் வரும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு துறைமுகத்திலிருந்து இன்று புறப்பட்டு வரும் மாகோ கப்பல் பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கிவிட்டு மீள திருகோணமலை சென்றுமா ஏற்றிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரும்பக் கொழும்பு செல்லும் மாகோ கப்பல் 8000 பீப்பா மண்ணெண்ணெய் ஏற்றி வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

சமீப காலத்தில் பெருந்தொகை மண்ணெணணெய் எடுத்து வரப்படுவதை அடுத்து மண்ணெண்ணெயின் விலையில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (தி பா)

# நாட்டுப்பற்றாளர் நித்தி நினைவுக் கூட்டம்

நாட்டுப் பற்றாளர் அமரர் து. நித்தியானந்தன் (நித்தி) அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம்நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொன் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் நாதாஞ்சலி, கவிதாஞ்சலி, அஞ்சலி உரைகள் என்பவற்றுடன் கீதாஞ்சலி நிகழ்வில் மெல்லிசைப் பாடகர் எஸ் ஜீ. சாந்தன் குழுவினர் வழங்கும் "நித்தி நினைவுப் பாடல்கள்" நிகழ்வு இடம் பெறவுள்ளன.

# பிரேமா கொலைவிசாரணை பூர்த்தியாகவில்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கொலை தொடர்பாக விசாரணைகள் பூர்த்தியடையவில்லை என பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

பிரேமதாசா கொலை தொடர்பாக அவரது மகள் துலாஞ்சலி ஜெயக்கொடிக்கு விளக்கம் கொடுக்கும்முகமாக அவரது விஜேராம வீட்டிற்குச் சென்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசாரணைகள் பூர்த்தியடையாததால் துலாஞ்சலி ஜெயக்கொடி தெரிவித்த கருத்துக்களையும் தொடரும் விசாரணையின் போது கருத்திற் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை விசாரணைகள் பூர்த்தியடைந்துவிட்டதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா துலாஞ்சலி ஜெயக்கொடிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரேமதாசா கொலை தொடர்பாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்த கருத்துக்களை அவரின் குடும்பத்தினர் ஏற்க மறுத்துவிட்டனர்.

இரகசிய பொலிஸார் விசாரணை மேற்கொள்ள பன்னிரண்டு நாட்கள் ஏன் சென்றன? என்று குடும்ப உறவினர்கள் கேட்ட கேள்விக்கு பதில் கூறமுடியாது பொலிஸ் மா அதிபரும் அவருடன் கூடச்சென்றவர்களும் திணறினர் என்றும் அவர் கொலை செய்யப்பட்ட இடத்தை கழுவி வாகன போக்குவரத்து கூட நடத்தியதன் காரணம் அங்கு கிடந்த தடயங்கள் அழிப்பதுதான் என பிரேமா குடும்பத்தினர் வலியுறுத்திய தாகவும் தெரியவருகிறது.


யாழ். ஸ்ரீதரில்

புரூஸ்லி நடித்த

GAME OF DEATH

தினசரி

பிற்பகல் 4.00மணி 6.00மணி

சனி ஞாயிறு

காலை 10. 30 மணி

பிற்பகல் 4.00 மணி 6.00மணி

(சி- 9570)



ஏற்றத்தாழ்வற்ற சமநிலை பேணுவோம்

சீதனம் அழித்திடப் போர்க்கோலம் பூணுவோம்


### வட - கிழக்கு

தாகவும் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் இது தொடர்பாக தான் பூரண விளக்கம் கொடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாம் ஏன் எம் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காண அரசியல் முயற்சிகளை முழுமையாக மேற்கொள்ளவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

### றொனி டிமெல்

சிங்கள தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு ஐ. தே. க அமைச்சரவையில் தொடர்ச்சியாக நிதி அமைச்சர் பதவி வகித்தமைகுறிப்பிடத்தக்கது. பின்னர் இவர் 1988பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின் நாட்டைவிட்டு வெளியேறினார்.

### கிழக்கில்

கைப்பற்றப்பட்டன.

அடுத்த தாக்குதல், மட்டக்களப்பு மாவட்டம் வெலிக்கந்தைப் பகுதியில் காலை 8.00 மணியளவில் நடைபெற்றது. வெலிக்கந்தை பொலிஸ் நிலையத்தில் இருந்து முத்துக்கல் சந்திக்கு ரோந்து வந்த பொலிசார் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 10பேர் கொண்ட இவ் ரோந்து அணியே விடுதலைப் புலிகள் அதிரடியில் சிக்கியது. மூன்று நிமிடங்கள் மட்டும் நடந்த இத் தாக்குதலில் நான்கு பொலிசார், கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

இத் தாக்குதலிலும் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை எனபதோடு பொலிசாரிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இவ்விரு தாக்குதல் களையும் ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நான்கு இராணுவத்தினரும், நான்கு பொலிசாரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தது.

# யாழ்.பல்கலை ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

யாழ். பல்கலைக் கழக நிர்வாகம், போதனை சாரா ஊழியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை இன்று காலை 8 மணி முதல் மேற்கொள்ளவுள்ளதாக யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் ச. க. தனேந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

தொழில் நுட்பவியலாளர்களின் உள்ளக ரீதியான நியமனம் தொடர்பாக இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சிகள் எதுவும் பலனளிக்காத சந்தர்ப்பத்திலேயே இன்று அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

மின், நீர் விநியோகம், பாதுகாப்பு ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர் தத்தம் துறை அல்லது பிரிவுகளுக்கு கடமைக்குச் செல்லாது பகிஷ்கரித்து காலை 8 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் கூடுவர் என அவர் மேலும் கூறினார். (05)

### வெடி விபத்தில்

வீரச்சாவடைந்த வீரவேங்கை தியாகநந்தன் (பாலச்சந்திரன் பார்த்தீபன், மல்லாவி, கிளிநொச்சி, அனிச்சியன் குளம். வேறு முகவரி: விசுவப்பா யோகலிங்கம் அனிச்சியன் குளம் மல்லாவி) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இருவர் குத்திக் கொலை

(கொழும்பு)

கொழும்பு அரசாங்க அதிபர் செயலகத்தில் வைத்து இருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கொல்லப்பட்டனர்.

### பொதுமக்கள்

வேலை இழக்கச் செய்யக் கூடாது மக்களது பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. வறுமை, பஞ்சம் தாண்டவம் மாடுகிறது இவற்றுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தும் போது மிகவும் மோசமான முறையில் அவை அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்காக பெருந்தொகைப்பணத்தை செலவு செய்து வருகிறது இதனால் சுகாதாரம், கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான செலவினம் குறைக்கப்படுகிறது. இந் நிலையில் இந்த அரசாங்கத்தால் வடக்கு கிழக்கில் கொழுந்து விட்டெரியும் யுத்தத்திற்கு தீர்வை காணமுடியாது.

இந்த பிரச்சினைக்கு இருகூறான நாட்டை ஒன்றுபடுத்தும் இனப்பிரச்சினைக்கு உண்மையானதும் தெளிவான தீர்வு காண்பதும் எமது அரசாங்கத்தினால் மட்டுமே முடியும்.

தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகளை வழங்கும் திட்டம் ஒன்று எம்மிடம் உண்டு இப்பொழுது அதனைத் தயாரித்து வருகிறோம். பெரும்பான்மையினரின் உரிமைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் சிறுபான்மையினரின் வேண்டுகோளுக்கு இணங்கிச் செயற்படுவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இந்த யுத்தத்தை மேலும் வளர்க்கும் நோக்கம் எம்மிடம் கிடையாது.

மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையிலான எல்லாத் தரத்தினருக்கும் நன்மையளிக்கும் பொதுமக்கள் நலனைக் கருத்திற் கொண்ட பொருளாதாரக் கொள்கையொன்றை நாம் ஏற்பாடு செய்து முடித்து விட்டோம். அதனை இன்னும் இரு மாதங்களில் மக்கள் முன் வைப்போம்.

துப்பாக்கிப் பலத்தை விட மக்கள் பலமே பெரிதெனப் புரிந்து கொண்ட ஜே. வி. பி. யினர் பலரும் இப்போது எம்மைச்சூழ்ந்துள்ளனர். ஐ. தே. கட்சியுடன் எமக்குப் பகைமை கிடையாது. ஆனால் அரசை மாற்றுவதே எமது குறிக்கோள் என்றார்.




JURASSIC PARK

பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட டைனொசேர்
இன்னமும் உயிர் வாழ்கின்றதாமே?
இப்படித்தான் பல பத்திரிகைகள் சொன்னன.
இது உண்மையா? அல்லது
விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை மையப்படுத்திய
கலைஞனின் கற்பனையா?
நீங்கள் அறியத்தானே போகிறீர்கள்
யாழ் ஸ்ரீதர் திரையரங்குக்கு 22-6-94 காலை 10 மணிக்கு
சமுகமளிக்கவும்.
நுழைவுச்சீட்டு மே மாத 'நங்கூரம்' இதழுடன்
கட்டணம் இல்லப் பயணம்; கட்டாயம் கலந்து கொள்ளுங்கள்

உங்கள் உற்றதோழன் நங்கூரம்

(சி-9633)



## பெயர் மாற்றம்

"ராகமாலிகா ஆடைஅகம்"
ஆகிய எமது ஸ்தாபனம்
இன்று முதல்
"கோபிராஜ் ஆடைஅகம்"
என பெயர்மாற்றம் செய்யப்பட்டு உள்ளது என்பதை
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அனைவருக்கும்
மிக அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கோபிராஜ் ஆடைஅகம்,
இல 4 சிறப்பு அங்காடி,
(நவீன சந்தை) உட்புறம்,
யாழ்ப்பாணம்.

(சி- 9635)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.